JAFFNA

ISSN 1391-9504

# விஜய்
Vijey விஜய்

16.09.2015 - மலர் 12, இதழ் 29

## பூமியைக் கடந்து சென்ற பெறுமதி மிக்க விண்கல்





## உலகை இணைத்த 'பட்டுப் பாதை' வர்த்தகம்

ரெக்டோ பென்ச்சாவின் கதை

(5ஆம் பக்கம்)

## இலங்கையின் நீர்மின் நிலையங்கள்



## வீதிகளில் விபத்துக்களை தவிர்ப்போம்...!





விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



படங்களைப் பார்த்து, வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.

(நல்ல/ காய்ச்சல்/ நேரம்/ கரும்பலகையில்/ பாடசாலை/ நீதிபதி/ கடிதம்/ சிங்கத்தை)





01. இப்பொழுது ............................ 2 மணி 55 நிமிடம்.

02. நாம் ............................ செல்வது பாடசாலை பஸ்ஸில் ஆகும்.





03. இவர்கள் ஒன்பது பேரும் ............................ நண்பர்கள்.

04. அவர் ஒரு ............................



05. மாலாவுக்கு ............................


06. அவன் ............................ புகைப்படம் எடுத்தான்.



07. அவள் ............................ எழுதினாள்.

08. அவன் ............................ எழுதினான்.





1. இதுவொரு;

   1. வீடு   2. வகுப்பறை   3. மைதானம்

2. இங்கு எத்தனை பேர் கைகளை உயர்த்தியவாறு உள்ளனர்?

   ..................................................

3. இவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பவர்;

   1. நடுத்தர வயதுடைய ஓர் ஆண்
   2. வயது முதிர்ந்த ஓர் ஆண்
   3. நடுத்தர வயதுடைய ஒரு பெண்

4. நடு வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் பாதணிகள் அணிந்துள்ளனரா?

   இல்லை/ ஆம்/ எதுவும் கூறமுடியாது - ..................................................




1. இங்குள்ளவற்றில் ஒரு வித்துடைய பழங்களைக் குறிப்பிடுக.

   ..................................................

2. வீட்டுத் தோட்டத்தில் வளர்த்துப் பயன்பெறக்கூடிய பழ வகைகள் எவை?

   ..................................................




3. இனிப்புடன் புளிப்புச் சுவையையும் கொண்ட பழங்கள் எவை?

   ..................................................

4. இங்கு காணப்படும் பழ வகைகளில் முக்கனிகளில் உள்ளடங்குபவை எவை?

   ..................................................

1. இந்த வீட்டிற்கு ஜன்னல்கள் உள்ளன. இக்கூற்று;

   சரியானது / பிழையானது

2. வீட்டுக்கு அருகில் மரமொன்று உள்ளது. இந்த வாக்கியத்தை பன்மையில் தருக.

   ..................................................

   ..................................................



3. வீட்டுக்கூரையில் அமைக்கப்பட்டிருப்பது என்ன?

   ..................................................

4. வீட்டு முற்றத்தில் எந்த நிறத்திலான பூக்கள் பூத்திருக்கின்றன?

   ..................................................

-ஜீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரங்களை இழந்த சிறுவனுக்கு



# புதிய கரங்கள் பொருத்திச் சாதனை



கரங்களை இழந்த நிலையில் சியோன்

இரு கரங்களையும் இழந்த எட்டு வயது சிறுவனொருவனுக்கு, வேறு இரு புதிய கரங்களைப் பொருத்தி, வைத்தியர்கள் சாதனை படைத்துள்ளனர். அமெரிக்க வைத்தியர்களே இந்த மருத்துவ சாதனையை நிகழ்த்தியுள்ளனர். அந்தவகையில், உலகில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது கரங்கள் மாற்று சத்திரசிகிச்சையாக இது கருதப்படுகின்றது.

## சியோன் ஹாவி

படிப்பில் கெட்டிக்காரனாகத் திகழ்ந்த அமெரிக்க சிறுவனான சியோன் ஹாவி, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விசித்திரமானதொரு நோய் தாக்கத்திற்கு உள்ளானான். இந்த நோய்த்தாக்கத்திற்கு உள்ளானதால் சியோனின் உடலில் இரத்த ஓட்டம் குறைவடைந்து சென்றுள்ளதோடு, அவனது கரங்கள் நோய்க்கிருமித் தொற்றுக்குள்ளாகின. சியோனின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில், அவனது முழங்கைகளுக்குக் கீழான கைப்பாகத்தினை வெட்டியகற்ற வேண்டும் என வைத்தியர்கள் கூறியதற்கேற்ப, அவனது கரங்கள் அகற்றப்பட்டன.

இதன் பின்னர், தனது இரண்டு கரங்களிலும் சம அளவுப் பாகங்களை இழந்து, சோகத்தில் ஆழ்ந்திருந்த சியோனுக்கு அண்மையில் மகிழ்ச்சிகரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அதாவது, தனது இழந்த கரங்களுக்குப் பதிலாக புதிய கரங்கள் பொருத்தப்படும் என்ற செய்தியே அது.

## 11 மணிநேர சத்திரசிகிச்சை

கரங்கள் பொருத்துவதற்கான சத்திரசிகிச்சை 11 மணித்தியாலங்கள்வரை நடைபெற்றது. போல்ட்டிமோரின் பிலடெல்பியா குழந்தைகள் மருத்துவமனையிலேயே இந்த சத்திரசிகிச்சை இடம்பெற்றது. இதன்போது தசைகள், நரம்புகள், இரத்தக்குழாய்கள் என்பன மிகவும் நுட்பமான முறையில் பொருத்தப்பட்டன. இந்த சத்திரசிகிச்சையில் 40 வைத்தியர்கள் பங்கேற்றிருந்தனர்.



சத்திர சிகிச்சையின் போது....




புதிய கரங்கள் பொருந்த வேண்டும். எனவே, புதிய கரங்களை வாழ்நாள் பூராகவும் சிக்கல்

## வாழ்நாள் முழுவதும் மருந்துகள்

இரண்டு புதிய கரங்கள் பொருத்தப்பட்ட மிகவும் இள வயது நபராக சியொன் கருதப்படுகிறார். சியொனின் வயதை ஒத்த இறப்புக்குள்ளான சிறுவனொருவனின் கரங்களே இந்த சத்திரசிகிச்சையின்போது சியொனுக்குப் பொருத்தப்பட்டன. பொதுவாக, வேறு ஒருவரின் கரங்களை மற்றொருவருக்குப் பொருத்துவது என்பது இலகுவான விடயமல்ல. ஏனெனில், அந்த உடலுடன் ஏதுமின்றி இயங்கவைப்பதற்கு சியொன் வாழ்நாள் முழுவதும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

கரங்கள் பாதிக்கப்பட்ட பலருக்கும் தேவையெனின் சியொனின் இந்த சத்திரசிகிச்சையைப் போன்று புதிய கரங்களைப் பொருத்தும் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ள முடியும் என்று மேற்கூறிய சத்திரசிகிச்சையில் பங்குபற்றிய மருத்துவர்கள் பெருமையுடன் தெரிவிக்கின்றனர். -(பீ)

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652



புதிய கரங்கள் பொருத்தப்பட்டபின்னர் சியொன், தனது தாயாருடன் ஊடகவியலாளர் சந்திப்பிற்கு வருகை தரும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவரை வென்ற தெனாலிராமன்

ஒரு சமயம் விஜயநகரத்திற்கு வித்யாசாகர் என்ற ஒருவர் வந்திருந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் அறிந்த புலவர். தம்மைபோல யாரும் புலமை பெற்றவர் இருக்கமுடியாது என ஆணவம் கொண்டவர். அதனால், ஒவ்வொரு ஊராக சென்று அங்குள்ள புலவர்களையெல்லாம் வாதத்திற்கு அழைத்து வெற்றி பெற்று, பெருமையாக திரிந்துகொண்டிருந்தார். அவ்வாறே ஒருநாள் விஜய நகரத்திற்கும் வந்தார்.

அவர் மன்னரின் அவைக்கு வந்து தனது திறமையை வெளிப்படுத்தினார். அந்த அவையில் பெத்தண்ணா, சூரண்ணா, திம்மண்ணா போன்ற புலவர்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்கள். அவர்கள்கூட வித்யாசாகரை கண்டு அஞ்சி பின்வாங்கினர். தன்னிடம் வாதிட யாரும் முன்வராததை கண்ட வித்யாசாகர் ஆணவமுற்றார். தன் அவையில் அறிவில் சிறந்தவர்கள் இல்லையே என மன்னரும் வருந்தினார்.

இதனை உணர்ந்த தெனாலிராமன் அவை முன்வந்து "பண்டிதரே! உம்மிடம் வாதம் புரிய நான் தயார். ஆனால் "இன்று போய் நாளை வாருங்கள்" என்றான். இதைக் கேட்டதும் மன்னருக்கும், மற்றப் புலவர்களுக்கும் உற்சாகம் ஏற்பட்டது. அவர்கள் தெனாலி ராமனை வெகுவாகப் பாராட்டினர். இருந்தாலும்



வித்யாசாகரை தெனாலிராமனால் வெல்ல முடியுமா? என்ற சந்தேகம் அனைவருக்கும் இருந்தது. மறுநாள் தெனாலிராமன் ஆஸ்தான பண்டிதரை போன்ற விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து அவைக்கு வந்தார். தன் கையில் பட்டுத்துணியால் சுற்றப்பட்ட ஒரு கட்டையை வைத்திருந்தார். வாதம் ஆரம்பமாகியது. வித்யாசாகர் தெனாலியின் கையில் இருந்த கட்டைப் பார்த்தார். அது என்னவாக இருக்க முடியும்? என்று அவரால் ஊகிக்க முடியவில்லை. எனவே, "ஐயா! கையில் வைத்திருக்கின்றீர்களே! அது என்ன?" என்று கேட்டார்.

தெனாலி அவரை அலட்சியமாகப் பார்த்து, கம்பீரமாக "இது திலகாஷ்ட மகிஷ பந்தனம் எனும் நூல். இதைக்கொண்டுதான் உம்மிடம் வாதிடப்போகிறேன்!" என்றான். வித்யாசாகருக்கு குழப்பம் மேலிட்டது. அவர் இதுவரை எத்தனையோ நூல்களை படித்திருக்கிறார். கேட்டிருக்கிறார். ஆனால், தெனாலி கூறியதுபோல் இந்த நூலைப்பற்றி இதுவரை கேள்விப்பட்டதில்லை.

அந்த நூலில் என்ன கூறியிருக்குமோ? அதற்கு தம்மால் பதில் சொல்ல முடியுமோ? முடியாதோ? என்ற பயம் ஏற்பட்டது. அதனால், நயமாக 'வாதத்தை நாளை வைத்துக்கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டு வித்தியாசாகர் சென்றுவிட்டார்.

அன்றிரவு வித்யாசாகர் பலவாறு சிந்தித்துப் பார்த்தார். தெனாலி கூறிய நூல் புரிந்துகொள்ள முடியாத நூலாக இருந்தது. இதுவரை தோல்வியே கண்டிராத அவர் தெனாலியிடம் தோல்வி அடைய விரும்பவில்லை. ஆகவே, அந்த இரவே சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டே ஓடிவிட்டார்.

மறுநாள் அனைவரும் வந்து கூடினர். ஆனால் வித்யாசாகர் வரவில்லை. விசாரித்தபொழுது அவர் இரவே ஊரை விட்டு ஓடிவிட்டார் என்ற செய்திதான் கிடைத்தது. வெகு சுலபமாக அவரை வென்ற தெனாலியை அனைவரும் பாராட்டினர். அப்போது மன்னரோ தெனாலியிடம் "தெனாலிராமா நீ வைத்திருக்கும் திலகாஷ்ட மகிஷ பந்தனம் என்ற நூலைப் பற்றி நானும் இதுவரை கேள்விப்பட்டதேயில்லை. அதை எங்களுக்கு காட்டு!" என்றார்.

தெனாலி மூடியிருந்த பட்டுத்துணியை விலக்கினார். ஏடுகள் எதுவும் அங்கு காணப்படவில்லை. அதற்குப் பதிலாக, எள், விறகு, எருமையைக் கட்டும் கயிறு இருந்தது. அதைக் கண்டதும் அனைவரும் வியப்புற்றனர்.

உடனே, தெனாலி "அரசே! திலகம் என்றால் எள், காஷ்டம் என்றால் விறகு, மகிஷ பந்தனம் என்றால் எருமையைக் கட்டும் கயிறு. இதன் உட்பொருளை வைத்துத்தான் 'திலகாஷ்ட மகிஷபந்தனம்' என்று சொன்னேன். இதைப்புரிந்து கொள்ளாத அந்தப் புலவர் பயந்து ஓடிவிட்டார்" என்று கூறிச் சிரித்தான். மன்னர், தெனாலிராமனை பாராட்டி உயர்ந்த பரிசளித்தார்.

# ஓநாயும் நரியும்

அடர்ந்த காடு ஒன்றில் ஓர் ஓநாயும் நரியும் வசித்து வந்தன. நரியைவிட ஓநாய் பலசாலி என்பதால், ஓநாய் சொல்லும் வேலைகளை எல்லாம் நரி செய்துவந்தது. ஒருநாள் காட்டு வழியாக இரண்டும் சென்றுகொண்டிருந்தபோது ஓநாய் நரியைப் பார்த்து, "ஏய் சோம்பேறியே... எனக்குப் பசிக்கிறது. எங்கேயாவது போய் சாப்பாடு கொண்டுவா. இல்லாவிட்டால் உன்னைச் சாப்பிட்டுவிடுவேன்" என்றது.

நரி பக்கத்தில் இருந்த கிராமத்துக்குச் சென்றது. அங்கே ஓர் ஆடு, இரண்டு குட்டிகளைப் போட்டிருந்தது. அதில் ஒரு குட்டியைத் தூக்கிவந்து ஓநாயிடம் கொடுத்தது. ஓநாய் அந்த ஆட்டுக் குட்டியைச் சாப்பிட்டு முடித்தது. அப்படியும் அதற்குப் பசி அடங்கவில்லை. தானே கிராமத்துக்குள் சென்று இன்னொரு ஆட்டுக் குட்டியையும் பிடிக்க முயற்சிசெய்தது. ஆனால், ஓநாயைப் பார்த்துத் தாய் ஆடு கத்த ஆரம்பித்தது.

அந்தக் கிராமத்துக்குள் காணாமல்போன ஆடு, கோழிகளுக்கு எல்லாம் இந்த ஓநாய்தான் காரணம் என்று அதை நையப் புடைத்து அனுப்பினார்கள். உடம்பு முழுவதும் வீங்கிப்போய் காட்டுக்கு வந்து சேர்ந்தது ஓநாய். அடுத்தநாள், ஓநாயும் நரியும் வயல் வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது ஓநாய் நரியைப் பார்த்து, "ஏய் சோம்பேறி... எனக்குப் பசிக்கிறது. சாப்பாடு கொண்டு வா. இல்லாவிட்டால் உன்னைச் சாப்பிட்டுவிடுவேன்" என்றது.

"இங்கே ஒரு வீட்டில் ரொட்டி சுட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் போய் எடுத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றது நரி. அந்த வீட்டுக்குள் நுழைந்த நரி, வீட்டுப் பெண்மணி பார்க்காத நேரத்தில் ஆறு ரொட்டிகளைத் திருடி வந்து ஓநாயிடம் கொடுத்தது. ரொட்டிகள் மிகவும் சுவையாக இருந்ததால், எல்லாவற்றையும் வேகமாகச் சாப்பிட்டு முடித்தது ஓநாய்.

'ஆகா என்ன சுவை. என் பசி மேலும் கூடிவிட்டது!' என்ற ஓநாய், மேலும் ரொட்டிகளைத் தேடி அந்த விவசாயியின் வீட்டுக்குப் போனது. அங்கே போய் ரொட்டியை எடுக்க முயற்சித்தபோது, விவசாயியின் மனைவி ஓநாயைப் பார்த்து கூச்சலிட்டு ஊர் மக்களைக் கூட்டிவிட்டாள். எல்லோரும் சேர்ந்து ஓநாயை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டார்கள். நொண்டிக்கொண்டே காட்டுக்குள் வந்த ஓநாய், 'இதெல்லாம் உன்னுடைய சதிதான்' என்று நரியைத் திட்டியது.

அடுத்த நாளும் வயல்வெளியில் ஓநாயும் நரியும் சென்றுகொண்டிருந்தன. கால்களில் அடிபட்டு இருந்ததால், கால்களை இழுத்தபடியே நடந்து வந்த ஓநாய், 'இப்போது எனக்குப் பசிக்கிறது. ஏதாவது கொண்டுவராவிட்டால், உன்னைத் தின்றுவிடுவேன்' என்றது. 'இறைச்சி விற்பவனின் வீடு அருகில்தான் இருக்கிறது. அங்கே போய் இறைச்சித் துண்டை எடுத்து வருகிறேன்' என்றது நரி.




"நானும் உன்னுடன் வருகிறேன். தனியாகப் போனால், யாரிடமாவது அகப்பட்டு அடி வாங்கிக்கொண்டே இருக்கிறேன்" என்றது ஓநாய். இரண்டும் அந்த வீட்டுக்குச் சென்றன. அந்த வீட்டின் சுவரில் ஒரு சிறிய துளை இருந்தது. அதன் வழியாக இரண்டும் உள்ளே சென்று, அங்கே இருந்த இறைச்சியைத் தின்றன. நரி மட்டும் அந்தத் துளை வழியாக வெளியே போவதும் உள்ளே வருவதுமாக இருந்தது. அந்தத் துளை வழியாக வெளியே செல்லக் கூடிய அளவுக்கு மட்டுமே சாப்பிட வேண்டும் என்பதால் அப்படிச் செய்தது.

இதைப் பார்த்த ஓநாய், "என்ன செய்கிறாய்?" என்று கேட்டது. அதற்கு நரி, "யாராவது வருகிறார்களா என்று பார்க்கிறேன்" என்றது. 'கிடைத்தது போதும்' என்று ஏகத்துக்கும் சாப்பிட்டுக்கொண்டிருந்தது ஓநாய். ஒரு கட்டத்தில், சாப்பிடுவதை நிறுத்திவிட்டது நரி. திடீரென இறைச்சிக் கடைக்காரன் அங்கே வந்துவிட்டான். அவனைப் பார்த்த நரி, அந்தத் துளையின் வழியாக வெளியேறிவிட்டது. ஓநாய் நிறையச் சாப்பிட்டுவிட்டதால் உடல் பெருத்து அதனால் வெளியேற முடியாமல் நன்றாக சிக்கிகொண்டது. தன் இறைச்சி எல்லாம் பறிபோய்விட்டது என்ற ஆத்திரத்தில் அவன் ஓநாயை அடி அடி என்று அடித்தான். ஓநாய் பரிதாபமாக இறந்துபோனது. அதன்பின்னர் நரி நிம்மதியாக வசிக்க ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





noolaham.org | aavanaham.org



இதுவரை காலமும் செயற்கையாக தயாரிக்கப்பட்டு உடலில் பொருத்தப்படும் பயோனிக் கண்களை நாம் 1980 ஆம் ஆண்டுகளில் திரையிடப்பட்ட 'சிக்ஸ் மில்லியன் டொலர் மேன்' என்ற தொலைக்காட்சித் தொடரிலும் 'டர்மினேட்டர்' திரைப்படத்திலும் மட்டுமே கண்டுகளித்துள்ளோம். ஆனால், இன்று யதார்த்த உலகிலும் அதனை கண்டுகளிப்பதற்கு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தற்பொழுது அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் சிலர் கணினியின் உதவியுடன் அவ்வாறான பார்வையாற்றலைத் தரும் 'பயோனிக்' கண்களை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். 'மொனாஷ்' பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் குழு இந்த பயோனிக் கண்களை மனிதர்களுக்குப் பயன்படுத்தி ஆய்வு செய்யும் பரிசோதனைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர். இந்த கருவியானது, கண்ணாடியின் மீது பொருத்தப்படும் நுண்ணிய கெமராவினால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த கெமராவே 'ரெட்டினாவாக' இயங்குகின்றது. அதன்மூலம் பிடிக்கப்படும் காட்சிகள் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு மூளையில் பொருத்தப்பட்டுள்ள கணினி 'சிப்' புக்கு (chip) அனுப்பப்படுகின்றது.

# பார்வையற்றவர்களுக்கு பார்வை ! 'பயோனி




## வெளியக டிஜிட்டல் வடிவமைப்பு


இந்த பார்வை தொழில்நுட்பம் பார்வையற்றோர் பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பினைப் போன்றது என்று ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் ஆத்தர் லோரி குறிப்பிடுகின்றார். மேலும் அவர் கூறுகையில்; எமது புதிய தொழில்நுட்பமானது, எதிர்காலத்தில் வெள்ளைப் பிரம்புகளுக்கான தேவையை இல்லாமல் செய்துவிடும். அத்துடன், புத்தகங்களில் பெரிய எழுத்துக்களை வாசிக்கும் தொழில்நுட்ப வசதி புதிய முறையில் உள்ளதனால், பார்வைப்புலன் அற்றவர்களுக்கு இது பெரும் பயன் அளிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார். தாம் பரீட்சித்துப் பார்க்கும் மைக்ரோ 'சிப்பினை' மூளையின் பிற்பகுதியில் உள்ள visual cortex என்ற பகுதியில் பொருத்திவிடுவதாகவும் கூறுகின்றார். தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள கணிப்பீடுகளின்படி, அனைத்து நோயாளிக்கும் மில்லி மீற்றர் 8x8 டைல்ஸ் 14 என்ற கிராபிக் வலையமைப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அனைத்து டைல் கட்டியிலும் 4x4 மைக்ரோசிப் உள்ளது. அதில் 5 லட்சம் டிரான்சிஸ்ட்டரும், மயிரிழை அலைகள் 45 இலக்ட்ரோட் அளவிலும் காணப்படுகின்றது.


முழுமையாக இயங்கும்போது இந்த டைல்ஸ்களுக்கு குறைந்த பரப்புக் கொண்ட கறுப்பு-வெள்ளைக் காட்சிகளே கிடைப்பதுடன், அது வெளியாக டிஜிட்டல் வடிவமைப்பு அலகினால் கிடைக்கின்றது. இதனை சக்திவாய்ந்த கெமரா தொடர்புபடுத்துகின்றது. பின்னர் அது அங்கிருந்து மூளையின் பார்வைப்புலன் பகுதிக்கு அனுப்புகின்றது. இந்த ஆய்வானது, அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வாளர்கள் ஆய்வுசெய்வது டர்மினேட்டரின் கண்களைப் போன்றதான சிக்கல் தன்மை வாய்ந்த கண்களை அல்ல**

## ஜேர்மனிலிருந்து மற்றுமொரு கண்

அவுஸ்திரேலியாவின் 'பயோனிக்' கண்களைப் போன்று மற்றுமொரு புதிய கண்டுபிடிப்பு பற்றிய விபரம் ஐரோப்பாவிலிருந்தும் அறியக் கிடைக்கின்றது. அதுவும், பயோனிக் கண்களாகும். ஜேர்மனியின் இந்த கண்டுபிடிப்பானது, தற்பொழுது பிரித்தானியாவில் பரீட்சித்துப்






பயோனிக் கண்ணை பெற்றுக்கொண்ட இரண்டாவது நபர் ரொபின் மில்லர்




சத்திரசிகிச்சை குழுவின் தலைவர் பேராசிரியர் ரொபட் மெக்லரன்



இந்த கருவியினைப் பொருத்திக்கொண்ட முதலாவது நபரான கிறிஸ் ஜேம்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




microchip இனை இயக்கியவுடனேயே நோயாளிகளுக்கு வெளிச்சத்தினைப் பார்க்க முடிந்தது. இப்படத்தில் இந்த வேறுபாட்டினைக் காணமுடியும்.


# தரும் ...க் கண்கள்’

8 மணித்தியாலங்கள் நடைபெற்றது. இது ஒரு சிக்கலான சத்திரசிகிச்சையாகும். பேராசிரியர் ரொபட் மெக்லரன் உட்பட ஒக்ஸ்போட் சத்திரசிகிச்சை மருத்துவ

மூளையின் ஒரு பகுதி விழித்துக்கொண்டதுபோல் உள்ளது. இந்த ஆய்வு எதிர்காலத்தில் நினைத்துப் பார்க்க முடியாத மாற்றங்களை ஏற்படுத்தும்



கம்பித் தொடர்புகளற்ற இந்த இலத்திரனியல் உபகரணத்தை உடம்பிற்கு வெளியே பொருத்தி அதனூடாக காட்சிகள் உள்வாங்கப்படுகின்றன.



3X3 மி.மீற்றர் அளவிலான சிறிய ‘சிப்’ இவ்வாறுதான் விழிப்படலத்துடன் இணைக்கப்படுகின்றது.

பார்க்கப்படுகின்றது. அண்மையில் மேற்கொண்ட விசேட சத்திரசிகிச்சையின்மூலம் பிரித்தானிய நோயாளிகள் இருவருக்கு இந்த பயோனிக் கண்கள் கிடைத்துள்ளன. இந்த இலக்ட்ரோன் ‘சிப்பினைப்’ பொருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை சுமார் 8 மணித்தியாலங்கள் நடைபெற்றன. இந்த சத்திரசிகிச்சைகள் வெற்றியளித்துள்ளதாகவே தெரிய வருகின்றது. சுமார் 20 ஆண்டுகளாக பார்வையின்றி இருந்த அவர்களுக்கு தற்பொழுது பார்வை ஆற்றல் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ரெட்டினிட்ஸ் பிக்மொன்டெசியா என்ற நோயினால் பாதிக்கப்பட்ட இருவருக்கே இந்த பயோனிக் கண்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த நோயானது, குணமாக்க முடியாத பார்வையாற்றலைப் பறிக்கும் ஒரு பரம்பரை நோயாகும். இத்தகைய நிலைக்கு உள்ளான இந்த இருவரே சத்திரசிகிச்சைக்கு உள்ளாகி பார்வையைப் பெற்றுள்ளனர். இந்த சத்திரசிச்சை நிபுணர்கள் சிலரும் இதில் பங்குபற்றியிருந்தனர்.

## ஒளியினை இனம்காணும் ஆற்றல்

லண்டன் வாசியான 60 வயதான ரொபின் மில்லர் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்ட இரண்டாவது நபராவார். அவருக்கு 1500 இலக்ட்ரோட் கொண்ட சிப் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த கருவியினைப் பொருத்திய பின்னர் எனக்கு வெளிச்சத்தினைப் பார்க்க முடிந்தது. “சில பொருட்களின் வடிவங்களைக் காண முடிந்தது. எனது பார்வையில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதனை என்னால் உணர முடிகின்றது” என்று மில்லர் கூறுகின்றார். “நான் நிறங்களைக் காண்பதற்காக கடந்த 25 ஆண்டுகளாகக் கண்ட கனவு தற்போது நனவாகியுள்ளது. உறங்கிக்கொண்டிருந்த எனது இவ்வாறான விடயத்திற்கு என்னால் ஒரு பங்களிப்பு செய்ய முடிந்தது பெரும் மகிழ்ச்சியினை தருகின்றது” என்று அவர் மேலும் கூறுகின்றார்.

இந்த கண் கருவியினை உருவாக்கிய ஜேர்மனியின் ரெட்டினா இம்ப்ளான்ட் ஏஜி (Retina Implant AG) நிறுவனம் பரீட்சார்த்த ஆய்வுகளை



பயோனிக் கண்ணின் chip

கடந்த ஏப்ரல் மாதம் நடுப்பாகத்தில் ஆரம்பித்திருந்தது. மேலே கூறப்பட்டுள்ள பிரித்தானியாவைச் சேர்ந்த இருவருக்கு கம்பிகள் அற்ற இந்த இலக்ட்ரோனிக் கருவி பொருத்தப்பட்டது. கருவியினை இயக்கியதும் ஒளியினைக் காணும் வாய்ப்பு அவர்களுக்கு கிட்டியது. மேலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கடுமையான பின்னணியினைக் கொண்ட வெள்ளை நிறப் பொருட்களை அவர்களுக்கு தெளிவாகக் காணும் ஆற்றலும் கிட்டியது.

## வெற்றியடைந்த சத்திரசிகிச்சைகள்

“இவ்வாறான தொழில்நுட்பத்திற்கு உதவி செய்ய வாய்ப்புக் கிட்டியமை எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது. நாம் மேற்கொண்ட இரண்டு சத்திரசிகிச்சைகளும் வெற்றி அளித்துள்ளமையை கூறிக்கொள்ள விரும்புகின்றோம்” என்று இந்த கண் மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். “இந்த கருவியினைப் பொருத்திய பின்னர் இவர்களுக்கு நாம் எதிர்பார்த்ததைவிட சிறந்த முறையில் பார்வை ஆற்றல் கிடைத்துள்ளது. இந்த தொழில்நுட்பம் மிகவும் ஆச்சரியமானது. குருட்டுத்தன்மையினை ஏற்படுத்தும் நோய்களினால் பாதிப்படைந்தவர்களுக்கும் இத்தொழில்நுட்பம் பெரும் வரப்பிரசாதமாகும்” என்றும் அவர்கள் மேலும் கூறுகின்றனர்.

மேற்படி கருவியினை பரீட்சிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஆறு ஆண்டுகளாக ஜேர்மனியில் நடைபெற்றது. தற்பொழுது சுயவிருப்புடன் முன்வருபவர்களுக்கு இந்த பரீட்சார்த்த சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்பின்னர் வணிக ரீதியில் இந்த கருவியினை உருவாக்குவதற்கு இந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

-பிரியதர்ஷினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்

பெயர்: ..........................................................

01) பின்வரும் பந்தியை வாசித்து விடையளியுங்கள்.

யானை ஒன்று மிகவும் கம்பீரமாக தன் தலையை அசைத்து அசைத்துக் கொண்டு நடந்தது. அவ்வழியில் எறும்புக் கூட்டம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. இதனைக் கண்ட யானை, 'என்னைவிட எவ்வளவு சிறிய பிராணிகள் இவை' என்று எண்ணி அலட்சியமாக அவற்றை மிதித்துக் கொண்டு சென்றது.

யானை சிறிது தூரம் சென்றதும் அதன் சுளகுபோன்ற காதுக்குள் 'சுளீர்' என்று ஏதோ கடிப்பதுபோல் தோன்றியது. அது தனது காதுகளை ஆட்டி ஆட்டிப் பார்த்தது. வலி குறையவே இல்லை. அப்போது எறும்பொன்று அதன் காதுக்குள் இருந்து பேச்சுக் கொடுத்தது. ''என்ன பெரியவரே! நான் சிறியவனாயிருந்தாலும் உம்மை வீழ்த்த முடியும் என்பதை மறந்துவிடாதீர்'' என்றது. யானையும் தன் தவறை உணர்ந்தது.

1. இப்பந்தியில் எறும்புக்குப் பொருத்தமான பழமொழி யாது?
   ..........................................................
2. யானை, சுளகு என்பனவற்றிற்கு ஒத்தகருத்துச் சொல்லை முறையே தருக.
   ..........................................................
3. யானை ஏன் அலட்சியமாக சென்றது?
   ..........................................................
4. 'சிறியவன்' என்பதன் எதிர்ப்பதம் யாது?
   ..........................................................
5. யானைக்கு எறும்பு பாடம் புகட்டியது ஏன்?
   ..........................................................
6. இப்பந்தியிலுள்ள உவமைச் சொல் ஒன்று தருக.
   ..........................................................
7. இதிலுள்ள சினைப் பெயர் இரண்டு தருக.
   ..........................................................

02) அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட சொற்களுள் சரியான சொல்லை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

1. முயற்சி உடையவர்கள் எடுத்த .......................................... வெற்றி பெறுவர்.
   (காரியங்களில், காறியங்களில், காரியங்கலில்)
2. வானத்தில் .......................................... மின்னி மின்னி ஒளிர்கின்றன.
   (நற்சத்திரங்கள், நட்சத்திரங்கள், நட்சத்திறங்கள்)
3. புரதம் உடல் .......................................... உரிய உணவு ஆகும்.
   (வளர்ச்சிக்கு, வலர்ச்சிக்கு, வளற்சிக்கு)

03) பின்வரும் இணைமொழிகளை நிறைவுசெய்க.

1. ஒருவரின் வாழ்க்கை மேடு .......................................... நிறைந்தது.
2. சிறுவர்கள் .......................................... பொந்துகள் முழுவதும் ஓடிவிளையாடினர்.




04) பின்வரும் பழமொழிகளுக்கு சமமான பழமொழிகள் தருக.

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
   ..........................................................
2. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
   ..........................................................

05) பின்வரும் ஒரு சொல்லுக்கு தொடர் சொல் அல்லது தொடர் மொழி தருக.

1. வைரவிழா/ மணிவிழா : ..........................................
2. முக்கனி : ..........................................
3. ஜெயந்தி விழா : ..........................................
4. வேட்பாளர் : ..........................................
5. செவிலி : ..........................................

06) பின்வரும் சொற்கூட்டத்தில் வேறுபட்ட சொல்லின்கீழ் கீறிடுக.

1. இடுக்கண், அல்லல், ஆனந்தம், இன்னல்
2. வளி, தென்றல், பவளம், சூறாவளி
3. மாதா, பிதா, அம்மா, அன்னை
4. ஆழி, சாகரம், ஆறு, கடல்
5. வாகனம், ஆகாயம், வானவில், விசும்பு

07) இடைவெளிகளை நிரப்புக.

1. நான் என்பதன் பன்மைச் சொல் - ..........................................
2. ஆரணியம் என்பதன் ஒத்தசொல்- ..........................................
3. ஞாலம் என்பதன் எதிர்ப்பதம் - ..........................................
4. அம்மா மணக்க மணக்க உணவு பரிமாறினாள்.
   இவ்வாக்கியம் காட்டும் காலம் - ..........................................
5. நல்லறிவு என்பதை பிரித்தெழுதினால் - ..........................................

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

### புலமைப்பரிசில் விடைகள் - சுற்றாடல்

(செப்டெம்பர் 09 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 06. 3 | 11. 3 | 16. 3 |
| 02. 4 | 07. 1 | 12. 1 | 17. 4 |
| 03. 3 | 08. 3 | 13. 2 | 18. 1 |
| 04. 3 | 09. 1 | 14. 1 | 19. 4 |
| 05. 2 | 10. 4 | 15. 4 | 20. 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கோள் காட்டப்படுவதும் 'நன்றி' என குறிப்பிடப்படுவதும்




செய்திகள், ஆக்கங்கள் படைக்கப்படும்போது அநேகமான சந்தர்ப்பங்களில் அவற்றின் முக்கியமான சில அம்சங்கள், பகுதிகள் இன்னொரு ஊடகத்திலிருந்தோ அல்லது இன்னொருவரது பேச்சிலிருந்தோ பெறப்பட்டதாக இருக்கலாம். இப்படியான பகுதிகளை பிரசுரிக்கும்போது, அவற்றை மேற்கோள் காட்டிப் பிரசுரிப்பது கண்ணியமான ஒரு நடைமுறையாக கருதப்படுகின்றது. மேற்கோள் காட்டல் என்பதை இருவிதமாக நோக்கலாம்.

ஒன்று: ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக பயன்படுத்தலாம்.

இரண்டு: நன்றி தெரிவிப்பதற்காக பயன்படுத்தலாம்.

இதில் ஒரு தகவலை உறுதிப்படுத்தல் என பார்க்கும்போது, உதாரணத்திற்கு நமது நாட்டில் நடைபெற்ற மோசமான ஒரு நிகழ்வு பற்றிய செய்தியொன்றை வெளிநாட்டில் உள்ள செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதென வைத்துக்கொள்வோம். அல்லது நமது நாட்டைச் சேர்ந்த முக்கிய நபர் ஒருவரது ஊழல் மோசடி பற்றிய செய்தியொன்றை குறித்த வெளிநாட்டு செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளதென வைத்துக்கொள்வோம்.

இத்தகைய செய்தியை எமது நாட்டில் உள்ள பத்திரிகையொன்றில் அதனை செய்தியாக பிரசுரிப்பதென்றால் நேரடியாக அந்த செய்தியை பிரசுரித்தால் குறித்த நபர்களிடமிருந்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ அச்சுறுத்தல்கள் அல்லது சட்டப் பிரச்சினைகள் ஏற்படலாம். இவற்றைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி இந்த செய்தியை குறிப்பிடும்போது இத்தகவலை வெளியிட்ட வெளிநாட்டு செய்திநிறுவனத்தையோ, அல்லது பத்திரிகையையோ குறிப்பிட்டு இத்தகவலை 'இந்தப்' பத்திரிகை வெளியிட்டுள்ளது என குறிப்பிடுவதாகும். உதாரணத்திற்கு பின்வருமாறு ஒரு செய்தியை குறிப்பிடலாம்.

இலங்கையில் அண்மைக் காலமாக நடைபெற்று வருகின்ற போதைப் பொருள் வர்த்தகத்தில் இலங்கையின் முக்கிய அரசியல் பிரமுகரான திரு. பிரியந்தவுக்கு நேரடித் தொடர்புகள் இருப்பதாக 'ரொய்ட்டர்' செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்தியை நன்றாக அவதானியுங்கள். இங்கு பிரியந்த என்ற அரசியல் பிரமுகர் சட்டவிரோதமான ஒரு செயலை செய்வதாக செய்தியில் குறிப்பிடும் அதேவேளை, இத்தகவலை ரொய்ட்டர் நிறுவனமே வழங்கியதாக சுட்டிக்காட்டப்படுவதன் மூலம், குறித்த இலங்கை பத்திரிகையானது, தான் தப்பித்துக்கொள்வதற்கான ஒரு பாதுகாப்பு கேடயமாகவும் அதனை பயன்படுத்திக் கொள்கின்றது. இதனால், சட்ட சிக்கல்களுக்கு முகம்கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் தவிர்க்கப்படுகின்றன.

பிரச்சினைக்குரிய பலவிதமான செய்திகளும், கட்டுரைகளும் இப்படித்தான் மேற்கோள் காட்டப்பட்டு தப்பித்துக்கொள்ளும் உபாயத்தை உள்ளூர் ஊடகங்கள் கையாளுகின்றன. இரண்டாவது: நன்றியை உணர்த்துதல் என்பதை நோக்கும்போது, சில சந்தர்ப்பங்களில் உள்நாட்டு ஊடகங்களால் பெற்றுக்கொள்ள முடியாத அல்லது பெற்றுக் கொள்ளக் கடினமான செய்திகளையோ, கட்டுரைகளையோ, படங்களையோ வேறொரு பத்திரிகையிலிருந்தோ நிறுவனத்திடமிருந்தோ, பெறும்போது குறித்த பத்திரிகை அல்லது நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிட்டு 'நன்றி' என குறிப்பிடும் முறையானது, ஒருவகையில் ஊடகத்துறையில் கண்ணியத்தை உணர்த்தும் செயற்பாடாகவே நோக்கப்படு கின்றது.


இன்னொரு வகையில் நோக்கினால் சில சந்தர்ப்பங்களில் இவ்வாறு நன்றி என்ற வார்த்தையை குறிப்பிடாமல் விட்டுவிட்டு குறித்த செய்தியை மட்டும் பிரசுரிப்பதாக இருந்தால் இந்த செய்தியின் மூலத்திற்கு சொந்தக்காரரான குறித்த பத்திரிகையோ, செய்தி நிறுவனமோ எந்தவொரு அனுமதியும் இன்றி இதனை பிரசுரித்த பத்திரிகையின்மீது சட்ட ரீதியிலான நடவடிக்கைகளையும் எடுக்க முடியும். எனவே, பிற பத்திரிகையொன்றில் வெளியாகிய செய்தியை இன்னொரு பத்திரிகையில் பிரசுரிக்கும்போது, 'நன்றி தினமணி' 'நன்றி தினத்தந்தி' போன்ற வார்த்தைகள் பிரசுரமாவதைக் காணலாம்.

இந்த வழிமுறையானது, கண்ணியத்தை உணர்த்துவதாகவும் இருக்கலாம். சட்ட சிக்கல்களிலிருந்து தப்பித்துக்கொள்வதாகவும் இருக்கலாம். இல்லையேல் இது செய்திக் களவாடல் என்ற வகைக்குள் சேர்க்கப்பட்டுவிடும்.

(தொடரும்)

-ரிஷபன்





வெல்லுங்கள்! விஜய் — தூவானம் வழங்கும் 8GB Pen Drive பரிசு!!



4000 ஆங்கில மாதிரி கடிதங்கள் அடங்கிய மென்பொருளும் பென்டிரைவ் உடன் இலவசமாக வழங்கப்படும்.

பிரதி புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

* 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

02.09.2015 'தூவானம்' கேள்விக்கான விடை:
அவுஸ்திரேலியா
Pen Drive வெற்றியாளர்:
என்.கெஜித்,
30/16,A
கஜபா பிளேஸ், கிருலப்பனை.

அனுப்பவேண்டிய முகவரி:
Pen Drive போட்டி
(16.09.2015)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை
Write Message
F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)
Sponsored:
MY LOOK.LK
FB/Web: MyLook.lk
Twitter: MyLookLK
(The Online Women Clothing Store)


இவ்வார கூப்பன்:
16.09.2015
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..............................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆகாய விமானத்தினை உருவாக்கிய

# ரைட் சகோதரர்களின் கதை

*மனிதர்கள் தமது தனிப்பட்ட குறிக்கோளினை அடைவதற்காக மேற்கொண்ட பரிசோதனை முயற்சிகள், சிந்தனைகள் முழு மனித குலத்திற்கும் பயன்மிக்கதாக அமைந்த பல நிகழ்வுகளை வரலாற்றில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு சிந்திக்கத் தலைப்பட்டவர்களின் எண்ணங்கள் மற்றும் அர்ப்பணிப்புத் தன்மைகள் காரணமாகவே, நாம் இன்று பலவிதமான தொழில்நுட்ப வசதிகளை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இந்தவகையில் ஆகாய விமானப் போக்குவரத்து துறையில் நாம் அடைந்த முன்னேற்றங்களுக்கு காரணகர்த்தாவாகத் திகழ்ந்த ரைட் சகோதரர்களின் விபரங்கள் பற்றி பார்ப்போம்.*




உலகின் முதலாவது வெற்றிகரமான விமானத்தினை உருவாக்கிய பெருமை ரைட் சகோதரர்களையே சாரும். இவர்களுக்கு முன்னர் பலர் விமானத்தினை உருவாக்கி பரீட்சித்துப் பார்த்தபோதிலும் ஆகாயத்தில் விமானியினால் கட்டுப்படுத்தக்கூடிய விமானம் ஒன்றினை உருவாக்கிய பெருமை இவர்களையே சாரும்.




ரைட் சகோதரர்கள் என்று பொதுவாக அழைக்கப்படும் வில்பர் ரைட் மற்றும் ஒவில் ரைட் ஆகியோரின் தந்தையார் பெயர் மில்டன் ரைட் என்பதாகும். தாயின் பெயர் சுசான் கத்தரின் ஆகும். இதில் வில்பர் ரைட் 1867 ஏப்ரல் 16 ஆம் திகதி பிறந்தார். ஓவில் ரைட் 1871 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் திகதி பிறந்தார். இவர்களின் தந்தையார் பத்திரிகை ஆசிரியராகவும் மதகுருவாகவும் இருந்தவராவார். சிறு வயது முதலே பல தேடல்களை மேற்கொண்டு அவற்றை பரீட்சித்துப் பார்த்துக் கற்றுக் கொள்ளும் ஆர்வமும் ரைட் சகோதரர்களிடம் காணப்பட்டது.




வகுப்பறையில் விளையாட்டு ஹெலிகொப்டர் ஒன்றினை தயாரித்துக் கொண்டிருந்தபோது வசமாக ஆசிரியரிடம் மாட்டிக்கொண்ட ஓவில் ரைட் தனது ஆசிரியரிடம் 'தானும் தனது சகோதரரும் பயணிக்கக்கூடிய ஆகாய விமானம் ஒன்றினை நிர்மாணிப்பதே தனது இலக்கு' என்று தெரிவித்தார்.




18 வயதில் ஓவில் ரைட் உயர்கல்வியைக் கைவிட்டு தானே சுயமாக உருவாக்கிய அச்சு இயந்திரத்தினைப் பயன்படுத்தி அச்சகம் ஒன்றினை நிறுவினார். பின்னர் இதில் சகோதரர் வில்பர் ரைட்டும் இணைந்துகொண்டார். இவர்களின் இந்த வர்த்தக நடவடிக்கைகள் வெற்றி அடைந்தன. 1893 ஆம் ஆண்டுகளில் சைக்கிள் பாவனை பிரபல்யம் அடைய ஆரம்பித்ததையடுத்து அவர்கள் சைக்கிள் திருத்தும் தொழிற்சாலையொன்றை அமைத்தனர். இது வெற்றிகரமான தொழிலாக அமைந்தது.





1896 இல் ஆகாய விமானங்கள் குறித்த செய்திகள் அன்றைய பத்திரிகைகளில் பரவலான செய்திகளாக பிரசுரமாகியிருந்தன. ரைட் சகோதரர்கள் இந்த விமானங்களில் உள்ள குறைபாடு ஒன்றினை அவதானித்தனர். வீதியில் சைக்கிள் ஓட்டுநர் சைக்கிளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதனைப் போன்று ஆகாயத்தில் விமானத்தினை விமானி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் குறித்து அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.




1902 இல் தமது க்ளைடருடன் 'கிட் ஹோக்' கடற்கரைக்கு சென்ற ரைட் சகோதரர்கள் 700 தடவைகளுக்கு மேலாக வெற்றிகரமான பறக்கும் பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டனர். மணல் குன்றுகளுக்கு மத்தியில் மிகவும் சிரமத்துடன் இந்த பரீட்சார்த்த முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டனர்.




1903 டிசம்பர் 17 ஆம் திகதி அதிக காற்று வீசுக் கொண்ட கடற்கரையில் 20 அடி உயர வான்பரப்பில் முதலாவது விமானத்தினை (விமானியுடன்) ஓவில் ரைட் செலுத்திப் பார்த்தார். இந்த விமானப் பறப்பு 12 செக்கன்கள் வரை இடம்பெற்றதுடன் 120 அடி தூரம் விமானம் பறந்தமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் வில்பர் ரைட் மூன்று தடவைகள் இந்த விமானத்தினை செலுத்திப் பார்த்தார். இதன்போது 59 செக்கன்களில் 852 அடி தூரமே பறக்க முடிந்தது. பின்னர் 1905 ஒக்டோபர் 5 ஆம் திகதி ரைட் சகோதரர்கள் இருவரும் 38 நிமிடங்களுக்குள் 38.9 கி.மீற்றர் தூரம் பறந்தனர்.




ரைட் சகோதரர்கள் தமது புதிய கண்டுபிடிப்பினை ஐக்கிய அமெரிக்காவுக்கு விற்பனை செய்ய முயன்ற அதேவேளை, பல முயற்சிகளின் பின்னர் மேலும் நவீனப்படுத்தப்பட்ட விமானத்தினை அவர்கள் உருவாக்கினர். விபத்துக்கள் மற்றும் தோல்விகள் பலவற்றிற்கு மத்தியிலும் தமது முயற்சியினைக் கைவிடாது முயன்று அவர்கள் அதில் வெற்றியும் பெற்றனர்.




1909 நொவெம்பர் 22 ஆம் திகதி ரைட் சகோதரர்கள் நிறுவனம் ஆரம்பமாகியது. வில்பர் ரைட் அதன் தலைவரானார். ஓவல் ரைட் உப தலைவரானார். 1912 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி 45 ஆவது வயதில் வில்பர் ரைட் காலமானார். இதன் பின்னர் ஓவல் ரைட் சுமார் 28 ஆண்டுகள் நாஸா நிறுவனத்தில் பணியாற்றினார். 1930 ஏப்ரல் 8 ஆம் திகதி டேனியல் ககன்ஹேம் விருதினை அவர் பெற்றுக்கொண்டார். 1936 ஏப்ரல் 29 ஆம் திகதி தேசிய விஞ்ஞான அக்கடமியின் தலைவர் பதவியும் அவருக்கு கிடைத்தது. 76 ஆண்டுகள் வாழ்ந்த அவர் 1948 ஜனவரி 30 ஆம் திகதி காலமானார்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவை எதிர்நோக்கியுள்ள தாவர இனம்



அறிவியல் பெயர்: *Exacum walkeri*

இலங்கைக்கு மட்டும் உரித்தான இந்த தாவர இனம், வருடத்தில் ஒரு முறையே பூக்கின்றது. இந்த பூக்கும் தாவரம், 60 சென்ரிமீற்றர் உயரம் வரை வளரும். கடல் மட்டத்திலிருந்து 900 மீற்றர் முதல் 2,500 மீற்றர் வரை உயரத்தில் அமைந்துள்ள ஈரலிப்பான மலைப்பகுதிகளிலும் உப மலையக வனாந்தரங்களிலும் காணப்படும் நிழல் கொண்ட மற்றும் சரிவுப்பகுதிகளில் இத்தாவரத்தைக் காணலாம். குறிப்பாக; நுவரெலியா, கண்டி மாவட்டங்களில் இவற்றைக் காணமுடிவதுடன், பிதுருதலாகல, ஹோட்டன் சமவெளி, சிவனொளிபாதமலை, பூண்டுலோயா, தொலொஸ்பாகே, ஹன்த்தான ஆகிய பகுதிகளிலும் இத்தாவர இனத்தைக் காணலாம். இத்தாவரங்களில் வெள்ளை நிறப் பூக்கள் பூக்கும்.



ஆக்கிரமிப்பு தாவரங்களின் பரவல், மண்சரிவு, சரிவான பகுதிகளில் கட்டட நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் அழகுக்காக இத் தாவரங்களை பயன்படுத்துதல் போன்ற காரணங்களினால் இந்த தாவர இனம் அழியும் அபாயத்தினை எதிர்நோக்கியுள்ளது.

# மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த...



* சலவை இயந்திரத்தைப் பயன்படுத்துவதாயின், வாரம் முழுவதும் உபயோகிக்கும் ஆடைகளை ஒரே நாளில் கழுவுங்கள்.
* தேவையற்ற நிலையில் ஒளிரும் மின்குமிழை அணைத்துவிடுங்கள்.
* வீட்டில் LED அல்லது CFL மின்குமிழை உபயோகியுங்கள்.
* குளிர்சாதனப்பெட்டியில் பழங்கள் - காய்கறிகளை சுற்றி வையுங்கள். உணவுகளை மூடி வையுங்கள்.
* மின்கேத்தலில் நீரை சூடாக்கும்போது, தேவையான அளவு நீரை மட்டும் பயன்படுத்துங்கள்.
* ஆடைகளை மின்னழுத்தும்போது ஒரு வாரத்திற்குத் தேவையான ஆடைகளை ஒரே தடவையில் அழுத்தி வையுங்கள்.
* எந்நேரமும் மின் விசிறிகளைப் பயன்படுத்தாமல், வீட்டில் இயற்கை காற்றோட்டம் வரும் வகையில் கதவு-ஜன்னல்களை திறந்து வையுங்கள்.


மின்சாரத்தை சேமிப்போம்- சோலார் பெனல்களை வென்றிடுவோம் விஜய்

வாராந்தம் வினாவுக்கு விடையளித்து Lanka GlobalLifestyle வழங்கும் ரூ. 55,000 மதிப்புள்ள சோலார் பெனலொன்றை வென்றிடுங்கள்

Lanka GlobalLifestyle

இவ்வார வினா:

இலங்கையின் நீர்மின் உற்பத்தி நிலையங்கள் 3 தருக.

விடையை தபாலட்டையில் மாத்திரம் எழுதி, 25.09.2015 இற்கு முன்னர் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

மின்சாரத்தை சேமிப்போம் -
சோலார் பெனல்களை
வென்றிடுவோம் வினா - 6,
விஜய்,
த.பெ.இல. 2037, கொழும்பு.


சோலார் பெனல் வெல்பவர் | போட்டி இல -4 இன் வெற்றியாளர் | பி.சந்தோஷ், 13, 8 ஆம் வீதி, மஸ்கெலியா.


# இலங்கையில் உள்ள நீர்மின் நிலையங்கள்


விக்டோரியா நீர்த்தேக்கம்

இலங்கையில் நீர்மின் உற்பத்தி கொள்ளளவு 1361 மெகாவொட்களாகும். இதனைத் தவிர, தேசிய மின்சார வலையமைப்பில் இணையும் சிறிய ரக நீர்மின் நிலையங்களும் உள்ளன. இலங்கையின் மின்சார உற்பத்தி வரலாற்றில் மிகவும் பழமையானதும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் நீர்மின் உற்பத்தி முறை விளங்குகின்றது. 1980 களின் ஆரம்பத்தில் நீர்மின்சார உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்குடன் பலதரப்பட்ட நீர்மின் உற்பத்தி நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டன. இலங்கையில் நீர்மின் அபிவிருத்தித் திட்டங்கள் மூன்று பிரதான பிரிவுகளின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. அவையாவன;

மகாவலி வளாகம், லக்ஷபான வளாகம், சமனல வளாகம் என்பனவாகும்.




கொத்மலை நீர்மின் நிலையம் மற்றும் அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட மேல் கொத்மலை நீர்மின் நிலையம் போன்றவை நிலத்தடி நீர்மின் நிலையங்களாகும். இவை தவிர, எதிர்காலத்தில் நிர்மாணிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நீர்மின் நிலையங்களாக ப்ரோட்லன்ட்ஸ் மற்றும் மொரகஹகந்த ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

## இலங்கையின் நீர்மின் உற்பத்தி நிலையங்கள்

* விக்டோரியா
* கொத்மலை
* மேல் கொத்மலை
* சமனல
* ரன்தெனிகல
* ரன்டெம்ப
* உக்குவளை
* பழைய லக்ஷபான
* கெனியன்
* விமலசுரேந்திர
* புதிய லக்ஷபான
* இங்கினியாகல
* போவதென்ன
* பொல்பிட்டிய
* குகுளே கங்க
* உடவளவே

## உத்தேச நீர்மின் நிலையங்கள்

* ப்ரோட்லன்ட்ஸ்
* மொரகஹகந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே மேலைத்தேய நாடுகளுக்கும் கீழைத்தேய நாடுகளுக்குமிடையே பல்வேறுபட்ட தொடர்புகள் பேணப்பட்டு வந்தன. அத்தொடர்புகள் வர்த்தகத்தின் காரணமாக மேலும் பலமடைந்தன. வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சியடைய ஆரம்பிக்கும்போது, மேற்குலகையும் கிழக்குலகையும் இணைக்கும் பாதைகள் உருவாகின. அவ்வாறு உருவான ஒரு பாதையே 'பட்டுப் பாதை' (Silk Road/Silk Route) ஆகும்.






# வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியால் தோன்றிய 'பட்டுப் பாதை'





## பட்டுப் பாதையின் தோற்றம்

பண்டைய காலம் தொடக்கம் பட்டுப் புடவை உற்பத்தியில் சீனா புகழ்பெற்று விளங்கியது. சீனாவின் பட்டுப் புடவைகளுக்கு ஐரோப்பாவில் அதிக கிராக்கி நிலவியது. அதற்கமைய, ஐரோப்பாவுக்கு பட்டுப் புடவைகளை எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்பட்ட போக்குவரத்து மார்க்கமே 'பட்டுப் பாதை' என அழைக்கப்பட்டது. பட்டுப் பாதை சீனாவில் ஆரம்பித்து மேற்கு நோக்கி விரிந்து சென்றது. பண்டைய காலத்தில் இரு பட்டுப் பாதைகள் இருந்தன. ஒன்று- தரைவழி பட்டுப் பாதை. மற்றையது - கடல்வழி பட்டுப் பாதை ஆகும். அன்றைய காலத்தில் தரைவழி பட்டுப் பாதையே அனைவரையும் கவர்ந்தது.

## பட்டுப் பாதையைக் குறிக்கும் ஏனைய பெயர்கள்

தரைவழி பட்டுப் பாதை சீனாவின் ஹேன் அரசவம்ச காலத்தில் தான் ஆரம்பமாகியது. ஹேன் அரச வம்சத்தைச் சேர்ந்த ஹேன் வுடி பேரரசன் காலத்தில் சேங் கியேன் என்பவர், மேற்கு பிரதேசங்களுக்கு செல்வதற்காக பயன்படுத்திய இப்பாதை, பின்னர் பட்டுப் பாதையானதாக நம்பப்படுகின்றது. இப்பாதையூடாக பிரதானமாக சீன பட்டுப் புடவைகளே கொண்டு செல்லப்பட்டன. இதனாலேயே, இந்த மார்க்கம் 'பட்டுப் பாதை' எனும் பெயரால் அழைக்கப்பட்டது. மேலும், இப்பாதையூடாக வேறு பல பொருட்களும் கொண்டு செல்லப்பட்டன. அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பொருட்களுக்கமைய போசிலின் பாதை, செரமிக் பாதை, வாசனைத் திரவியப் பாதை ஆகிய பெயர்களினாலும் இப்பாதை அழைக்கப்பட்டது.

## பட்டுப் பாதையும் இலங்கையின் அமைவிடமும்

கடல்வழி பட்டுப் பாதை இலங்கையின் ஊடாக சென்றமையால், சர்வதேச மட்டத்தில் இலங்கையும் பிரபல்யம் பெற்றது. கப்பல் மாலுமிகளும் கூட இலங்கைத் துறைமுகங்களை தமது தங்குமிடங்களாக மாற்றினர். இங்கு தமது கப்பல்களை நங்கூரமிட்டு - நிறுத்தி ஓய்வெடுத்தனர். சீனாவின் நெங்கிங் எனும் இடத்தில் இருந்து செங்கடலின் நைல் நதிக் கழிமுகத்திற்கு அருகில் இருக்கும் ஏடன் கடல் வரையான பயணப் பாதையின் இடையிலேயே இலங்கை அமைந்திருந்தது. இதனால், அவ்வழியாகச் செல்லும் கப்பல்கள் இலங்கையின் மாந்தோட்டம் துறைமுகத்தில்

நங்கூரம் இட
பயணத்தை
காணப்பட்ட
ந்தோட்
ந்தை) இ
ரப்பகுதியில்
மிகவும் முக்
துறைமுகமா
படவில்லை.
மற்றும் பட
மத்தியநிலை
கட்டும் இட
கும் இடமாக
கடற்பயணா
வோரின் ஓ
இலங்கையி
கிற்கு எடுத்




## தரைவழி பட்டுப் பா... நிகழ்ந்த பண்ட...

பட்டுத் துணிகளுடன், தரைவழி பட்டுப் ...லகிற்கு கொண்டு செல்லப்பட்டவை ஏரா... பாரசீக மதம், சீனர்களின் கொன்ஃபியூசியன்... றோடு; கலை, கணிதம், விஞ்ஞானம், ஆயு... சமயம், சட்டம், கலாசாரம், சிற்பம், ஓவியம் ... அம்சங்களும் இதில் அடங்குகின்றன.

மேலும் பீங்கான் பொருட்கள், பெறுமதிமி... யங்கள், யானைந்தந்தங்கள், முத்து, இரத்தி... வர்த்தகப் பொருட்களும் பட்டுப் பாதையூடா... விற்கு கொண்டு செல்லப்பட்டன. சீனாவி... விற்கு கடதாசி பற்றிய அறிமுகமும் இதனூ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கடல்வழி, தரைவழி பட்டுப் பாதையின் பிரதான வழிகள்






நங்கூரம் இட்டு தரித்து, மீண்டும் பயணத்தை தொடரும் வழக்கம் காணப்பட்டது.

...ந்தோட்ட துறைமுகம் (...ந்தை) இலங்கையின் கரையோரப்பகுதியில் அமைந்திருந்த மிகவும் முக்கியமானதொரு துறைமுகமாக மாத்திரம் செயல்படவில்லை. மாறாக, கப்பல் மற்றும் படகுகளை திருத்தும் மத்தியநிலையமாகவும் கப்பல் கட்டும் இடமாகவும் முத்துக்குளிக்கும் இடமாகவும் மிக நீண்ட கடற்பயணங்களை மேற்கொள்வோரின் ஓய்விடமாகவும் இலங்கையின் தகவல்களை உலகிற்கு எடுத்துச் செல்லும் தொடர்பாடல் மையமாகவும் செயல்பட்டது.

பௌத்த குருவான பாகியன், இப்னு பதூதா, மார்க்கோபோலோ, ஹியூசாங் போன்ற நாடுகாண் பயணிகள் இலங்கைக்கு வந்ததும் இந்த கடல்வழி பட்டுப் பாதை வழியாகவே ஆகும். மேலும், புவியியல் ரீதியாக இலங்கையின் அமைவிடமானது, இலங்கையிலிருந்து பெறப்பட்ட முத்துக்கள், இரத்தினங்கள், யானைத்தந்தங்கள், யானைகள், ஆமை ஓடுகள், வாசனைத் திரவியங்கள் போன்ற வளங்களை உலகெங்கும் எடுத்துச் சென்று விற்பனை செய்யவும் வழியமைத்தது.

...கிகளும் ...ங்களை ...ாற்றினர். ...ா நங்கூர ...டுத்தனர். ...ம் இடத் ...ள நைல் ...கில் இருக் ...ான ...டையி ...ந்திருந் ...யாகச் ...லங்கை ...முகத்தில்

## ...ழி பட்டுப் பாதையூடாக ...ந்த பண்டமாற்று

...ளுடன், தரைவழி பட்டுப் பாதை ஊடாக மேற்கு ...டு செல்லப்பட்டவை ஏராளம். பௌத்த மதம், ...ர்களின் கொன்ஃபியூசியஸ் மதம் என்பனவற் ...ணிதம், விஞ்ஞானம், ஆயுர்வேதம், அரசியல், ...கலாசாரம், சிற்பம், ஓவியம் என பல்துறைசார் ...தில் அடங்குகின்றன.

...ன் பொருட்கள், பெறுமதிமிகு வாசனைத் திரவி ...ந்தந்தங்கள், முத்து, இரத்தினம், பருத்தி போன்ற ...ட்களும் பட்டுப் பாதையூடாக அடிக்கடி ஐரோப்பா ... செல்லப்பட்டன. சீனாவிலிருந்து ஐரோப்பா ...ற்றிய அறிமுகமும் இதனூடாகவே கிடைத்தது.





செரமிக் பாத்திரம்

பருத்தி

## தரைவழி பட்டுப் பாதை

தரைவழி பட்டுப் பாதையானது, வடகீழ் சீனாவின் ஷியான் ஷான்ஷி மாகாணத்தின் தலைநகரில் இருந்து ஆரம்பமாகி, சுமார் 7000 கிலோமீற்றர் தூரம் வரை மேற்கு திசை நோக்கிப் பரந்து சென்றது.

வரலாற்று தகவல்களின்படி, அப்பாதை மிகவும் பயங்கரமானதும் சிரமங்கள் நிறைந்ததுமாக விளங்கியதோடு, அதிக தூரத்தையும் கொண்டிருந்ததாக தெரிய வருகின்றது. இப்பாதை வழியாக பயணிப்பவர்கள் பனிமலைகள், அடர்ந்த காடுகள், நதிகள்,பாலைவனங்கள் என பல்வேறு புவியியல் சூழல் தடைகளை கடந்து செல்ல வேண்டியிருந்துள்ளது.


## கடல்வழி பட்டுப் பாதை

கடல்வழி பட்டுப் பாதையானது, தரைவழி பட்டுப் பாதை பயன்பாட்டுக்கு வந்து வெகுகாலம் கழித்தே ஆரம்பமாகியது. கடல்வழியாக போக்குவரத்தினை இலகுபடுத்துவதற்கு அறிமுகமான திசையறி கருவியின் கண்டுபிடிப்பைத் தொடர்ந்தே, கடல்வழி பட்டுப் பாதை அறிமுகமானது. இப்பாதையானது, தென் சீனக்கடலில் ஆரம்பித்து, மலாக்கா தொடுகடல் வழியாக வங்காள விரிகுடாவை அடைந்து, இலங்கையைக் கடந்து அரபுக் கடல் வழியாக செங்கடல் வரை சென்று ரோமாபுரியை அடைந்தது. பாரசீக விரிகுடா வழியாக கிழக்கு மத்தியதரைகடல் பிரதேசத்திற்கு இதன்மூலம் செல்லவும் முடியும். அதுவரை உலகம் அறிந்திராத இலங்கையை அறிந்துகொள்ள இதன்மூலமே வாய்ப்பேற்பட்டது. அதன் பின்பே இலங்கையிலும் தேசிய ரீதியில் இனம், மதம் என்பன பெருமளவில் மாற்றமடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியைக் கடந்து சென்ற பெறுமதி மிக்க விண்கல்





**சுமார் 5.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி மிக்க விண்வெளி வஸ்துவொன்று அண்மையில் பூமியைக் கடந்து பயணித்துள்ளது. இதுவொரு ராட்சத விண்கல்லாகும். அமெரிக்காவின் நாஸா நிறுவனம் இந்த விண்கல்லுக்கு '2011 UW158' என பெயர் சூட்டியுள்ளது. இந்த விண்கல் முற்றிலும் பிளாட்டினத்தைக் கொண்டு விளங்குவதாலேயே, இதன் பெறுமதி 5.4 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.**

## பெறுமதி மிக்கது


2011 UW158 விண்கல்லானது, இலங்கை நேரப்படி கடந்த ஜூலை 19 ஆம் திகதி காலை 6 மணிக்கும் 7 மணிக்கும் இடையில் பூமியைக் கடந்து சென்றதாக கூறப்படுகின்றது. கெனேரி தீவில் அமைக்கப்பட்டுள்ள வானியல் விஞ்ஞான தொலைநோக்கி மூலமே இந்த விண்கல் பூமியைக் கடந்து பயணிக்கும் நேரடிக் காட்சி அவதானிக்கப்பட்டது.

## ஒரு கிலோ மீற்றர் அகலம்

பிளாட்டினம் நிறைந்த இந்த விண்கல்லைக் கைப்பற்ற முயன்றால், அதுவொரு பெறுமதி மிக்க வளமாக இருந்திருக்கும். எனினும், ஒரு கிலோ மீற்றர் அகலமுள்ள இந்த விண்கல்லை கைப்பற்ற முயற்சி செய்திருந்தால் அது பூமிக்கே ஆபத்தாக அமைந்திருக்கும். அதாவது, இதனைக் கைப்பற்றுவதன்மூலம் அதன் பயணப்பாதை திடீரென மாற்றமடைந்து பூமியில் மோதினால், அது பூமியின் அழிவுக்குக்கூட காரணமாக அமைந்துவிடும் என்று கூறப்படுகின்றது.

## X ரக விண்கல்

2011 UW158 எனும் விண்கல்லானது, X ரகத்திற்குரிய ஒரு விண்கல்லாக கருதப்படுகின்றது. X ரகத்திற்குரிய விண்கற்கள் மிகவும் அபூர்வமானவையாகும். மேலும், அவை பூமிக்கு அருகில் பயணிப்பதும் மிகவும் அபூர்வமாகும். பிரபஞ்சத்தின் ஆரம்பகாலத்தில் நிகழ்ந்த வெடிப்பினாலும் மோதலினாலுமே இத்தகைய விண்கற்கள் பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கலாம் என கருதப்படுகின்றது.




## பிரபஞ்சத்தில் நடமாடுவோர்

விண்கற்கள் மற்றும் எரிகற்கள் போன்றவை, அழிவுக்குள்ளாகி துண்டுகளான கிரகங்களின் பாறைத்துண்டுகளாகும். இத்தகைய விண்கற்களாலும் எரிகற்களாலும் பூமிக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாதென ஒருகாலத்தில் விஞ்ஞானிகள் கருதியிருந்தபோதிலும், அந்த நம்பிக்கை 1997 இல் தகர்ந்தது. அந்தவகையில், விண்கல்லொன்று மோதுவதால் பூமி அழிவடையும் என்ற கருத்தை உலகிற்கு முதன்முதலாக முன்வைத்தவர் வானியல் விஞ்ஞானியான யூஜின் ஷுமாகர் என்பவராவார். இவர், அவுஸ்திரேலியாவின் பாலைவனப் பகுதியில் பூமியை நோக்கி வீழ்ந்த வண்ணமிருந்த விண்பொருள் ஒன்றை மோட்டார் வாகனத்தில் பின்தொடர்ந்தபோது விபத்திற்குள்ளாகி உயிரிழந்தார்.


## 2032 இல் வரும் ஆபத்து

2032 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 26 ஆம் திகதி பாரிய விண்கல்லொன்று பூமியுடன் மோதும் என்றும், அந்த விண்கல் மோதலினால் உலக அழிவொன்று ஏற்படும் என்றும் விஞ்ஞானிகள் அண்மையில் எதிர்வுகூறியுள்ளனர். யுக்ரேனில் உள்ள 'க்ரிமீன்' நட்சத்திர பௌதிக விஞ்ஞான அவதானிப்பு மத்தியநிலையத்தின் விஞ்ஞானிகளே, சில வாரங்களுக்கு முன்பு இந்த பாரிய விண்கல்லை அவதானித்துள்ளனர். இந்த விண்கல்லின் பயணப்பாதை குறித்து கணித்ததற்கமைய, 2032 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதமளவில் குறித்த விண்கல் பூமி அமைந்திருக்கும் திசையை நோக்கி வரும் என்றும், அது ஓகஸ்ட் 26 ஆம் திகதி பூமியுடன் மோதும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த மோதலானது, 2500 மெகா தொன் அணுகுண்டுகள் ஒரே நேரத்தில் வெடிப்பதற்கு சமனாகும் என்றும், இவ்வாறு நடந்தால் அதன்மூலம் நிச்சயமாக உலக அழிவு ஏற்படும் என்றும் யுக்ரேன் விஞ்ஞானிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதிகளில் அவதானம் காப்போம் விபத்துக்களை தவிர்ப்போம்...!




பொது மக்கள் போக்குவரத்திற்கென பஸ் மற்றும் ரயில் போன்றவற்றையே அதிகம் பயன்படுத்துகின்றனர். அத்துடன், மோட்டார் சைக்கிள்களிலும், முச்சக்கர வண்டிகளிலும் பயணிப்பவர்களின் எண்ணிக்கையும் கணிசமானதாகும். இன்னும் சிலர் வீதிகளில் நடந்தும் செல்கின்றனர். இவர்களில் அவசரமான பயணங்களை மேற்கொள்பவர்களும் அடங்குவர். இதனால், காலை முதல் நள்ளிரவு வரை வீதிகளில் வாகனங்களையும் மக்களையும் பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது. பிரதான நகரங்களிலும் மக்கள் செறிவுள்ள பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் என்பது அதிகமாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



போக்குவரத்து விதி மீறல்கள், விபத்துக்கள் ஆகியன பரவலாக இடம்பெறுவதால் பெருந்தெருக்களில் பயணிப்பது என்பது ஆபத்தான விடயமாகியுள்ளது. பாடசாலைக்கு செல்லும் மாணவ, மாணவியர் பாதுகாப்பாக வீடு வந்து சேரும்வரை பெற்றோர்கள் கலக்கமடைந்திருப்பதும் வெளியில் செல்லும் குடும்ப உறுப்பினர்கள் வீடு திரும்பும் வரை வீட்டார் பொறுமையின்றி அங்கலாய்த்துக்கொண்டிருப்பதும் அன்றாட நிகழ்வுகளாக உள்ளது.




## நற்பழக்கங்களை கைக்கொள்ளுங்கள்

இற்றையை போன்று முன்னைய காலங்களில் வாகன நெரிசல் இல்லாதபோதிலும் மக்கள் வெளிப்பயணம் செல்லும்போது தமது இஷ்ட தெய்வங்களை வணங்கி பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன் பாதுகாப்பாக வீடு வந்து சேரவேண்டும் என்ற வேண்டுதலுடன் வெளிப்பயணங்களை மேற்கொண்டனர். இவ்வாறான பழக்கங்களைக் கடைப்பிடிப்பவர்கள் தெளிவான மனநிலையுடன் வீதிகளில் பயணிப்பதனால் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. நல்ல மனநிலையுடன் பெரியோரின் ஆசீர்வாதத்துடன் நாம் வீட்டை விட்டுப் புறப்படும் போது எமது எண்ண அலைகள் சிறந்து விளங்குகின்றன. இவை நம்மை ஆபத்தில் இருந்தும் காக்கின்றன.

## திட்டமிட்டுப் புறப்படுங்கள்

அவசரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. பாடசாலை மணி ஒலிப்பதற்கு முன்பே பாடசாலைக்கு சென்றுவிடுவதனால் இறுதிநேர அவசரத்தினைத் தவிர்த்துக்கொள்ள முடியும். அவசரமாகப் புறப்பட்டு பஸ்களிலும், ரயில்களிலும் மிதிபலகைகளில் பயணிப்பதனால் உயிராபத்துக்கள் நிகழ்கின்றன. நேரகாலத்துடன் திட்டமிட்டு புறப்படுவதனால் இந்த பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.




## பொறுமையைக் கடைப்பிடித்தல்

பயணம் செல்லும் போது பொறுமையைக் கடைப்பிடித்தல் அவசியமாகும். சிறிது நேரம் பொறுப்மையாக தரித்து நிற்காமல் அவசரமாக வீதியைக் கடப்பதனால் ஏற்படும் விபத்துக்கள் அனேகமாகும். பொறுமையின்றி அவசரமாக வீதியைக் கடத்தல், புகையிரதப்பாதைக்கு குறுக்காக சடுதியாகப் பயணித்தல், ஓடும் பஸ்ஸில் தாவி ஏறுதல் போன்ற செயல்களால் பல விபத்துக்கள் ஏற்படுகின்றன. இவற்றை தவிர்த்துக்கொள்வது மூக்கியமானதாகும்.

## வீதிச் சட்டங்களை மதித்தல்

வீதிச் சட்டதிட்டங்களை மதிக்காமல் பலர் வாகனங்களை செலுத்துகின்றனர். அதேநேரம், பாதசாரிகளும் வீதிச் சட்டங்களை மதிக்கத் தவறிவிடுகின்றனர். இதுவும் விபத்துக்களுக்கு வழிவகுக்கின்றன. மஞ்சள் கடவையில் வீதியைக் கடக்காமல் வேறு பாதைகளில் பாதையைக் கடக்க முற்படுபவர்கள், பாதசாரிக் கடவைகளில் நடக்காமல் வாகன நெரிசல் மிக்க பாதைகளில் நடப்போர், வீதிச் சமிக்ஞைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் ஆகியோர் இலகுவில் விபத்துக்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதியில் நடக்கும் பாதசாரிகள் வாகன ஓட்டுநர்கள் தொடர்பில் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். வேறு யோசனைகளைத் தவிர்த்து தெளிந்த புத்தியுடன் வீதியில் நடக்க வேண்டும். வீதியில் உங்களுக்கு நீங்கள்தான் பாதுகாப்பு என்பதனை மனதில் கொள்ளவேண்டும். பலவிதமான சிந்தனைகளுடன் செல்வதனையும், உரையாடிக்கொண்டு அசட்டையாக செல்வதனையும், தொடர்ச்சியாக மூன்று நான்கு பேர்களுடன் உரையாடிக் கொண்டு செல்வதனையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும்.



மேலும், பாதைகளில் கேலிபேசிக் கொண்டு செல்பவர்களும் அனேகம் உள்ளனர். பாடசாலை செல்பவர்களாகிய நீங்கள் இத்தவறுகளைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கைத்தொலைபேசிகளில் பேசிக்கொண்டு செல்வதையும் தவிர்ப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் கமல், சுனில், ராஜா ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**කමල්:** **අද අපි සරුංගලයක් හදමු නේද?**
அத அப்பி சருங்கலயக் ஹதமு நேத?
கமல்: **இன்று நாங்கள் பட்டம் ஒன்று செய்வோம்தானே?**

**සුනිල්:** **ඔව්, සරුංගලය හදන්න මම පාට කොළ ගෙනාවා.**
ஒவ், சருங்கலய ஹதன்ன மம பாட்ட கொள கெனாவா.
சுனில்: **ஆம், பட்டம் செய்வதற்கு நான் நிறக் கடதாசிகள் கொண்டு வந்தேன்.**

**කමල්:** **අපේ මඩුවේ උණ පතුරු තිබුණා. මම අරගෙන එන්නම්.**
அப்பே மடுவே உண பத்துரு திபுணா. மம அரகென என்னம்.
கமல்: **எங்கள் மடுவத்தில் மூங்கில் இருந்தது. நான் எடுத்துக்கொண்டு வருகிறேன்.**

**රාජා:** **මම පාප්ප හදාගෙන ආවා.**
மம பாப்ப ஹதாகென ஆவா.
ராஜா: **நான் பசை செய்துகொண்டு வந்தேன்.**

**කමල්:** **මෙන්න උණ පතුරු. ඔයා ශුද්ධ කරල ගානට කපන්න.**
மென்ன உண பத்துரு. ஒயா சுத்த கரல கானட்ட கபன்ன.
கமல்: **இதோ, மூங்கில். நீங்கள் சுத்தம் செய்து சரியான அளவில் வெட்டுங்கள்.**

**සුනිල්:** **හොඳයි.. මම කපන්නම්.**
ஹொந்தய்.. மம கபன்னம்.
சுனில்: **நல்லது.. நான் வெட்டுகிறேன்.**

**කමල්:** **රාජා! ඔයා මේ කොළ ගානට කපන්න.**
ராஜா! ஒயா மே கொள கானட்ட கபன்ன.
கமல்: **ராஜா! நீங்கள் இந்தக் கடதாசிகளை சரியான அளவில் வெட்டுங்கள்.**

**රාජා:** **හොඳයි කමල්!**
ஹொந்தய் கமல்.
ராஜா: **நல்லது கமல்.**

**කමල්:** **ආ.. අපි දැන් මේක මෙහෙම බඳිමු.**
ஆ... அப்பி தென் மேக மெஹெம பந்திமு.
கமல்: **ஆ... இப்பொழுது நாம் இதை இப்படிக் கட்டுவோம்.**

**රාජා:** **මම කොළ අලවන්නද?**
மம கொள அலவன்னத?
ராஜா: **நான் கடதாசிகளை ஒட்டவா?**

**කමල්:** **ඔව්, අලවන්න රාජා.**
ஒவ், அலவன்ன ராஜா.
கமல்: **ஆம், ஒட்டுங்கள் ராஜா.**

**සුනිල්:** **ආ.. දැන් ලොකු සරුංගලයක්.**
ஆ... தென் லொகு சருங்கலயக்.
சுனில்: **ஆ... இப்போது பெரியதொரு பட்டம்.**

**කමල්:** **දැන් අපි පිට්ටනියට ගිහින් සරුංගලය යවමු.**
தென் அப்பி பிட்டனியட்ட கிஹின் சருங்கலய யவமு.
கமல்: **இப்போது நாம் மைதானத்திற்கு சென்று பட்டம் விடுவோம்.**



### பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ...................... හදමු.
2. උණ ........... තිබුණා.
3. ............. අලවන්නද?




## Compound Sentence and Complex Sentence
## கூட்டு வாக்கியம் மற்றும் கலப்பு வாக்கியம்

ஆங்கில மொழி இலக்கணத்தில், கூட்டு வாக்கியம் மற்றும் கலப்பு வாக்கியம் என இரு வகையான வாக்கியத் தொகுதிகள், ஒன்றிணைக்கப்பட்ட வாக்கியங்கள் என்ற ரீதியில் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மேலும் இங்கே அவதானிப்போம்.

அ) Sunil went to the bank and spoke to the manager.
சுனில் வங்கிக்குச் சென்று, முகாமையாளருடன் கதைத்தான்.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஆ) This is the pen that Ranjith gave me.
இதுதான் ரஞ்ஜித் எனக்குத் தந்த பேனா ஆகும்.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

இ) Mary went to the library, but she did not borrow any books.
மேரி நூலகத்துக்குச் சென்றாள்; ஆனால், அவள் எதுவித நூல்களையும் இரவல் வாங்கவில்லை.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஈ) This is the camera which I brought from India.
இதுதான் நான் இந்தியாவில் இருந்து கொண்டுவந்த கெமரா ஆகும்.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

உ) Ranjith studied very hard, so he passed the examination.
ரஞ்ஜித் மிகவும் கடுமையாகப் படித்தான்; ஆகவே, அவன் பரீட்சையில் சித்தியடைந்தான்.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஊ) Do you know the person who stole the bicycle?
சைக்கிளைத் திருடிய நபரை உனக்குத் தெரியுமா?
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

எ) Will you do this work alone or shall I help you?
நீ இந்த வேலையை தனியாகச் செய்வாயா அல்லது நான் உனக்கு உதவி செய்யவா?
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஏ) He is the person who came to meet you yesterday.
இவர்தான் நேற்று உன்னைச் சந்திக்க வந்த நபர் ஆவார்.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

ஐ) We crossed that hill and came to this place.
நாங்கள் அந்த மலையைக் கடந்து, இந்த இடத்துக்கு வந்தோம்.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஒ) This is the house that belongs to Ajith.
இதுதான் அஜித்துக்கு உரித்தான வீடு ஆகும்.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

அ) Sujatha drinks coffee at night, but she doesn't drink tea at night.
சுஜாதா இரவில் கோப்பி குடிப்பதுண்டு; ஆனால், அவள் இரவில் தேநீர் குடிப்பதில்லை.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

ஆ) These are the mangoes that grew on my tree.
இவை எனது மரத்தில் காய்த்த மாம்பழங்கள் ஆகும்.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் 12 ஆவது விளையாட்டுத்துறை அமைச்சர்



இலங்கையின் 12 ஆவது விளையாட்டுத்துறை அமைச்சராக தயாசிறி ஜயசேகர பதவியேற்றுள்ளார். தனது பணிகளை ஆரம்பித்த நாளன்று ஊடகவியலாளர்களை சந்தித்த அமைச்சர்... இலங்கையின் விளையாட்டுத்துறை, சட்ட விதிமுறைகள், திருத்தங்கள் தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அதிருப்தியுடன் இருப்பதாகவும், தற்போது நாட்டில் விளையாட்டுத்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர்க்க முடியாத அளவிற்கு முனைப்பைப் பெற்றிருப்பதாகவும், இவற்றை உரிய வகையில் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை தான் கையாளவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், கிரிக்கெட் துறையை பொறுத்தளவில் இலங்கை கிரிக்கெட் சபைக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலை கூடிய விரைவில் நடத்துவது தொடர்பிலும் இலங்கை கிரிக்கெட் அணிக்கான பயிற்றுனரை தெரிவுசெய்வது தொடர்பிலும் சம்பந்தப்பட்டவர்களுடன் இன்னும் சில தினங்களில் கலந்துரையாடப்பட்டு தீர்வுகள் எட்டப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# றக்பி உலகக் கிண்ணப் போட்டிகள்




றக்பி உலகக் கிண்ணப் போட்டிகள் செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதியன்று ஆரம்பமாகவுள்ளது. றகர் போட்டிகள் தொடர்பான சில சுவாரஸ்யங்கள் வருமாறு...

1987 ஆம் ஆண்டில்தான் முதலாவது உலகக் கிண்ண றகர் போட்டிகள் ஆரம்பமாகியது. இந்த முதலாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் இணைந்து நடத்தின. இந்த முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் நியூஸிலாந்து அணியே செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது. அன்றுமுதல் இன்றுவரை நியூஸிலாந்து-02, அவுஸ்திரேலியா - 02, தென் ஆபிரிக்கா - 02, இங்கிலாந்து - 01 என கிண்ணத்தை முறையே வெற்றி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது,

றக்பி உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு வழங்கப்படும் செம்பியன் கிண்ணமானது 'வில்லியம் வெப் எலிஸ்' கிண்ணம் என்றே அழைக்கப்படுகின்றது. றக்பி போட்டியை அறிமுகப்படுத்தியவரின் நினைவாக அவரது பெயரே இக் கிண்ணத்திற்கு சூட்டப்பட்டுள்ளது. தங்க முலாம் பூசப்பட்ட இக்கிண்ணம், 38 சென்றிமீற்றர் உயரமும், 4.5 கி.கிராம் எடையையும் கொண்டதாகும். இதுவரை இக்கிண்ணத்தை வெற்றி கொண்ட நாடுகளின் பெயர்கள் இதில் பொறிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அணியின் இடைக்கால பயிற்றுனர்



இலங்கை அணிக்கும் மேற்கிந்திய அணிக்கும் இடையே ஒக்டோபர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளையொட்டி இலங்கை அணியின் இடைக்கால பயிற்றுனராக 49 வயதுடைய ஜெரோம் ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.


ஏற்கனவே பயிற்றுனர் பதவியிலிருந்த மார்வன் அத்தபத்து பதவி விலகியதையடுத்தே அப்பதவிக்கு தற்காலிகமாக ஜெரோம் ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே 2 டெஸ்ட், 3 ஒருநாள், 2 டுவென்டி டுவென்டி போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால்பந்து சுவாரஸ்யங்கள்



✱ கால்பந்தாட்ட 'கோல்' காப்பாளர்கள் 1913 ஆம் ஆண்டு வரை மற்ற வீரர்கள் அணியும் அதே நிறத்திலான உடைகளை அணிந்தே போட்டியிட்டனர்.



✱ 1950 ஆம் ஆண்டு நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியொன்றில் இந்திய அணியை சேர்ந்தவர்கள் காலணி (பூட்ஸ்) இல்லாமல் வெறும் காலுடன் விளையாடியதால் உலக கால்பந்து சம்மேளனத்தினால் பேட்டிகளிலிருந்து அவ்வணியினர் விலக்கி வைக்கப்பட்டனர்.

✱ 1975 ஆம் ஆண்டு சிலி மற்றும் உருகுவே அணிகளுக்கிடையே நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியொன்றின் போது 19 வீரர்கள் 'ஃபவுல்' முறையில் ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டதால் ஆட்டத்தைத் தொடர போதிய வீரர்களின்றி ஆட்டம் கைவிடப்பட்டது.

✱ 1900 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கால்பந்துப் போட்டியும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இதில் இங்கிலாந்து அணி தங்கப் பதக்கத்தை வெற்றியீட்டியது.





✱ மிகவும் குறைந்தளவு ரசிகர்களே பார்வையிட்ட உலகக் கிண்ண கால்பந்தாட்ட இறுதிப் போட்டி எது தெரியுமா? உருகுவே நாட்டில் நடைபெற்ற போட்டியே அதுவாகும். வெறும் 300 பேர் மட்டும் இப்போட்டியைக் காண வந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்கால வேலைவாய்ப்பு சந்தைகள்... சாரணர்களுக்கான இலக்கு

சிறு பராயத்தினை சாரணர் அமைப்பில் கழித்தவர்களுக்காக வேலை வாய்ப்புகளை அறிமுகப்படுத்தவும், பொருத்தமான தொழிலை தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தினை அளிக்கவும், அதற்காக இலக்கு வைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை முன்னெடுக்கவும் இம்முறை ஜம்போரியில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இலக்கினை நிறைவேற்றுவதற்கான முகாம் ஏற்பாட்டுப் பணிகளை சாரணர் பேராசிரியரான எல்.ஆர்.டி எச்.லங்காதிலக்க முன்னெடுக்கவுள்ளார். இதற்கான நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி விருது பெற்றவரான இவர் பயிற்றுவிப்பாளர் குழுவின் தலைவருமாவார். இவர் சுமார் 26 ஆண்டுகள் வரையான சாரணர் அனுபவத்தினைக் கொண்டுள்ளார்.

# முகாமில் 'பேக்கரி' அமைப்போம்!

சூழ முகாமின்போது பாண், ரொட்டி, பீட்ஸா ஆகிய உணவுகளைத் தயாரிப்பதற்கு பொருத்தமான இந்த அடுப்பானது 'பேக்கரி அடுப்பு' என்று குறிப்பிடப்படுகின்றது. தகட்டினால் செய்யப்பட்ட பெரிய 'குப்பை வாளி' அல்லது தகரப் பீப்பா (பெரல்) ஒன்றினை



இதற்குப் பயன்படுத்த முடியும். முதலில் பீப்பாவின் வாய் பகுதியினை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு நிலத்தின் மீது வைக்க வேண்டும். பின்னர் பீப்பாவை நன்கு மூடும் விதமாக மலை போன்ற அமைப்பில் தும்பினை அதன்மீது தூவிவிட வேண்டும்.

அடுப்பினை மூட்டுவதற்கு முன்னர் பீப்பாவினுள் அடர்த்தியான விறகுத்துண்டுகளை திணிக்க வேண்டும். அதன்பின்பு அந்த விறகுகளுக்கு தீ மூட்டுதல் வேண்டும். தீ மூண்டு நன்கு எரிந்த பின்னர் இருக்கும் தணலில் உணவுகளை சமைக்க முடியும்.

**கவனிக்க:**

* அடுப்பு போறணை போன்று வெப்பமடைந்து வரும்வரை பீப்பாவை நன்கு மூடி வைத்திருக்க வேண்டும்.

* பீப்பாவின் வாய் பகுதியினை அடிக்கடி திறக்காமல் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் போறணைக்குள் உணவுகளை இடுதல் வேண்டும்.


* படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வாய் பகுதியினை மூடுவதற்கு ஒரு மூடியினைத் தயார் செய்துகொள்ளலாம்.

* வெப்பமடைந்துள்ள அடுப்பினுள் எட்டிப் பார்ப்பது தவிர்க்கப்படல் வேண்டும். கண்களையும் முகத்தினையும் பாதுகாத்துக்கொண்டு உணவுகளை அடுப்பினுள் அனுப்பவோ உணவுகளை வெளியில் எடுக்கவோ வேண்டும்.

* காலை உணவுக்கான பாண், ரொட்டி மற்றும் பீட்சா உணவுகளை இவ்வாறு சமைக்க முடியும். குறிப்பாக பாண் தயாரிக்கும்போது, அதற்கு முன்தினமே இரவு வேளையில் கோதுமை மா, மாஜரின், நீர், உப்பு மற்றும் ஈஸ்ட் கலந்து மாக்கலவையினை முன்கூட்டியே உருவாக்கி வைக்க வேண்டும்.

## விஜய் சாரணர் உலகம்

# 'ஸ்ட்ரோ' குழாயில் வண்ணத்துப்பூச்சி



இளம் சாரணர்களாகிய உங்களால் இந்த கைவேலைப் பாட்டினை செய்ய முடியும். உங்களுக்குள் இருக்கும் படைப்பாற்றலினை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும். பற்பல வர்ணங்களினாலான பானங்கள் அருந்தும் உறிஞ்சி குழாய்களை (ஸ்ட்ரோ) தேடிக் கொள்ளுங்கள். தேவையான அளவிற்கு சிறிதாக வெட்டப்பட்ட குழாய்களைப் பயன்படுத்தி படத்தில் உள்ளவாறு உருவங்களை உருவாக்குங்கள். நீங்கள் உருவாக்கிய வண்ணத்துப்பூச்சிகள் இவ்வளவு அழகானவையானதா என்று பாருங்கள்.

# நிறைவடைந்த சர்வதேச ஜம்போரி

23 ஆவது சர்வதேச சாரணர் ஜம்போரி அண்மையில் நிறைவுற்றது. ஜப்பானின் யமகுச்சியில் நடைபெற்ற சர்வதேச சாரணர் ஜம்போரிகைக்கு வருகை தந்த 37 ஆயிரம் சாரணர்கள் எட்டு நாட்களாக பெற்றுக்கொண்ட அனுபவங்களை தத்தமது நாடுகளுக்கு எடுத்து சென்றனர். ஜப்பானின் ஹீரோஷிமா அருங்காட்சியகத்தில் நடைபெற்ற உலக சமாதான நிகழ்ச்சித் திட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைத்து சாரணர்களும் அதில் பங்குபற்றி சிறந்த அனுபவத்தினைப் பெற்றனர்.

பத்தாண்டுகளாக ஏற்பாடு செய்யப்பட்ட 23 ஆவது சர்வதேச சாரணர் ஜம்போரி 'கிரார நடவடிக்கை' வெற்றிகரமாக நிறைவடைந்தது. இதில் பெற்ற அனுபவங்களும் அறிவும் எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் ஆரம்பமாகவுள்ள அடுத்த சர்வதேச சாரணர் ஜம்போரிக்கு மிகவும் பயன்படும் எனலாம்.



* 2019 ஆம் ஆண்டு வட அமெரிக்காவில் நடைபெறவுள்ள 24 ஆவது சாரணர் ஜம்போரிக்கான கொடியினை கையளித்தபோது எடுத்த புகைப்படங்களை இங்கு காணலாம்.




சர்வதேச ஜம்போரியில் கலந்து கொண்ட இலங்கையர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருகிலுள்ள சொற்களை எழுத்துக்கூட்டத்திற்குள் இனங்கண்டு, நிறந்தீட்டுக.

log
skate
roller
hammer
branch
kitchen
balloon
dinosaur



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| i | h | c | n | a | r | b | c | q |
| v | g | y | h | m | t | x | g | c |
| c | s | c | z | k | s | b | o | d |
| h | a | m | m | e | r | o | l | f |
| z | e | x | s | k | a | t | e | m |
| i | r | o | l | l | e | r | z | p |
| k | i | t | c | h | e | n | n | o |
| k | n | o | o | l | l | a | b | s |
| d | i | n | o | s | a | u | r | k |

படத்திற்குப் பொருத்தமான சொல்லுடன் இணைக்க.












அடுத்து வர வேண்டியவை எவை?



விடை தருக





அறிவுக்கு விருந்து (02.09.2015) விடைகள்











குறுக்கெழுத்துப் போட்டி இல.154



**மேலிருந்து கீழ்**

1. மனைவியின் சகோதரி.
2. ஆடை.
3. செம்மறி ஆட்டின் ரோமத்தால் நெய்யப்படுவது.
4. ஊர்தி.
9. முனிவர்கள் இருப்பது. (தலைகீழ்)

**இடமிருந்து வலம்**

1. இங்கு விளையாடலாம்.
3. பொருட்கள் வாங்குமிடம்.
4. நீரில் நீந்தக்கூடிய பறவையினம். (குழம்பியுள்ளது)
5. பழம். (மாறியுள்ளது)
6. விளக்கு.
7. காற்று. (மாறியுள்ளது)
8. பாணம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.153 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தொ | லை | 2 பே | சி | | |
| ள் | | ர | | 3 வீ | ரி |
| ளா | | ன் | ய | லை | 4 பு |
| யீ | | | 5 ச | 6 த | ம் |
| ர | | ளி | | | லை |
| ம் | லை | 7 கா | ங் | ரு | 8 வ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



சேதுராம் - துலானி தம்பதியரின் செல்வப் புதல்வி கனிஷ்கா, தனது முதலாவது பிறந்தநாளை 16.09.2015 அன்று சொய்சாபுரவிலுள்ள தனதில்லத்தில் விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

பண்டாரவளை கிரேக் மேல் பிரிவைச் சேர்ந்த கதிர்வேல் - நாகநந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வி பத்மலோஷனி, தனது ஐந்தாவது பிறந்தநாளை 15.09.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹக்மன மீயல்லையைச் சேர்ந்த முஸ்பிக்-ரிமாஷா தம்பதியரின் செல்வப் புதல்வர்கள் அப்துள்ளா, அப்துர் ரஹ்மான் ஆகியோர் தமது நான்காவது பிறந்தநாளை 12.09.2015 அன்று கொண்டாடினர். இவர்களை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



கிண்ணியா - 03, அண்ணல் நகரைச் சேர்ந்த முனீர்- தாஹிரா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் அஹ்னாப் தனது இரண்டாவது பிறந்தநாளை 29.08.2015 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் இறைவன் அருள்பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

'பிறந்தநாள் வாழ்த்துக்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

# குழந்தைகள் ஏன் அழுகின்றன?





குழந்தை பிறந்த சில நிமிடங்களில் அதன் சுவாசத்திற்கு உந்து சக்தியாக அமைவது குழந்தையின் அழுகையே. தனது கைகளையும் கால்களையும் அசைத்து அழுவதன்மூலம் உடனடியாகவே குருதிமூலம் குழந்தையின் உடல் முழுவதும் ஒட்சிசன் எடுத்துச் செல்லப்படுகிறது. அத்துடன், குழந்தைகள் தமது அழுகையின் மூலமே தமது தேவைகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. அந்தவகையில்,உணவு மற்றும் தாயின் அரவணைப்பு என்பனவற்றை குழந்தைகள் தனது தாயிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றன.

இது ஓர் இயற்கை நிகழ்வாகவும் உள்ளது. இவ்வாறே, அதிகமான குளிர் அல்லது வெப்பநிலைகளின்போதும் தமக்கு ஏற்பட்டிருக்கும் ஒவ்வாமையை உணர்த்தவும் மற்றும் நோய்களை வெளிப்படுத்தவும் குழந்தைகள் அழுகின்றன. இந்த அழுகையே குழந்தைகளின் தொடர்பாடல் மொழியாகவும் உள்ளது.

வளர்ந்த குழந்தைகள் விருப்பம் இன்மை, அச்ச உணர்வு, தமது பெற்றோரையும் ஏனையவர்களையும் கவர்தல் என்பனவற்றுக்கு அமைவாக அழுகையை மேற்கொள்கின்றனர்.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



செ.நியந்தரி,
சைவப்பிரகாச ஆ.பாட., வவுனியா.



கே.வரிஷா,
கார்மேல் பற்றிமா கல்., பாண்டிருப்பு.



பி.கிருஷ்ணகுமார்,
கல்லுள்ள தோட்டம், மடுல்சீமை.



எஃப்.பாத்திமா சனா,
சித்திவிநாயகர் இந்.கல்., மன்னார்.



டி.பிஜ்ஜுதா,
க/பாரதி த.ம.வித்., கண்டி.



வி.அனுஜன்,
அல்-அஸ்ஹர் ம.வித்., மன்னார்.



யு.சஸினா,
வெலம்பொட மு.ம.வித்., வெலம்பொட.



செ.யதுர்ஷிகா,
கொ/குமர உதயம் வித்தியாலயம்,
கிருளப்பனை.



# ஆதிகால மனிதர்கள்

ஆதிகாலங்களில் மனிதர்கள் மிகவும் அச்ச உணர்வுடனேயே தமது வாழ்நாட்களைக் கழித்தனர். பூமியில் நடைபெறும் அனைத்து விடயங்களும் மர்மமாகவும் அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்களுக்கு இருந்தது. அந்தவகையில், கடும்மழை, காற்று, இருள், மின்னல், இடி முழக்கம் ஆகிய இயற்கை நிகழ்வுகளைக் கண்டு அஞ்சி நடுங்கினர். இவற்றில் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு குகைகளை நோக்கி நகர்ந்தனர். அவை மிகவும் பாதுகாப்பாக இருக்கவே அங்கேயே தமது வாழ்விடங்களை அமைத்துக்கொண்டனர். கொடிய மிருகங்களிடம் இருந்து பாதுகாப்பைப் பெறுவதற்கு கற்களினால் ஆன ஆயுதங்களையும் தயாரித்துக் கொண்டனர்.



காலப்போக்கில் கற்களை உராய்வதன்மூலம் மனிதன் தீயைக் கண்டறிந்து கொண்டான். தீயைக் கண்டறிந்தமை மற்றும் கல்லாயுதங்கள் ஆதி மனிதனின் மிகப் பெரும் கண்டுபிடிப்பாக இருந்தது. மனித குல அறிவியல் வளர்ச்சியின் முதற்படியாகவும் இது அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங். இல: 6/32
எஸ்.சபிஷன்,
பண்டாரநாயக்க சதுக்கம்,
தலவாக்கலை.


அங். இல: 6/33
ந.பிரியதர்ஷன்,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.


அங். இல: 6/34
சு.கௌசிகா,
அரசடி லேன்,
சுதுமலை கிழக்கு.


அங். இல: 6/35
முஹம்மத் ரில்வான்,
யாப்பஹுவ சந்தி,
மாகோ.


அங். இல: 6/36
இ.கார்த்திகன்,
சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.


அங். இல: 6/37
நா.கோபிதன்,
பேயாடி கூழாங்குளம்,
வவுனியா.


அங். இல: 6/38
ஒ.சதீஸ்,
அம்மன் நகர் - 02,
கட்டைப்பறிச்சான்.


அங். இல: 6/39
எஃப்.பாயிகா,
ஜயந்தி மாவத்தை,
அநுராதபுரம்.

## அலிபாபாவும் 40 திருடர்களும் 18

கதை, ஓவியம்: வேணு வாரியத்




## உலகில் பிரபல்யமானவர்கள்

# பி.டி. உஷா

1986 இல் தென் கொரியத் தலைநகர் சியோலில் நடாத்தப்பட்ட பத்தாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மைதான மற்றும் சுவட்டு நிகழ்ச்சிகளில் நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்று இந்தியாவின் பெருமையை உலகறிய உயர்த்தியவர் பி.டி.உஷா.

1980 ஆம் ஆண்டுகளில் இந்திய மகளிர் விளையாட்டு வீராங்கனைகளில் மிகவும் பிரபலமானவராக பி.டி.உஷா விளங்கினார். இன்றுவரை மகளிர் விளையாட்டு வீராங்கனைகள் இவரது சாதனையை முறியடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.




ஆறாவது தடகள, மைதான நிகழ்ச்சிகளில் இவர் பெற்ற ஐந்து தங்கப் பதக்கங்கள் தனி ஒரு சர்வதேச போட்டிகளில் தனி ஒருவரின் சாதனையாகும். 1986 இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அதிகூடிய பதக்கங்களைப் பெற்ற சாதனையாளராகவும் பி.டி.உஷா விளங்குகின்றார். தொடர்ந்து 1988 இல் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றார். அதன் பின்னர் தேசிய போட்டிகளில் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தினார். 1984 இல் லொஸ் ஏஞ்சல்ஸில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை சிறிய இடைவெளியில் தவறவிட்டார்.

1983 தொடக்கம் 1989 வரையான காலப்பகுதியில் தடகள மைதான நிகழ்ச்சிகளில் 13 தங்கப் பதக்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும், 1 வெள்ளிப் பதக்கத்தையும் என மொத்தமாக 17 பதக்கங்களைப் பெற்றிருந்த பி.டி.உஷா தற்போது விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியம் வரைவோம்




## தெரிந்து கொள்வோம்

✱ சார்க் நாடுகளின் பல்கலைக்கழகம் எங்கே உள்ளது?

பங்களாதேஷில் உள்ள சிட்டாகொங் நகரில்

✱ இலங்கை நீதித்துறை சம்பந்தமான மகாநாடொன்று 2015 ஜனவரியில் நடைபெற்றது. இது இலங்கையில் நீதித்துறை ஆரம்பிக்கப்பட்டு எத்தனையாவது ஆண்டை நினைவுகூரும் மகா நாடாக அமைந்தது?

130 வருட நிறைவு மகாநாடாகும்

✱ காற்றால் பரவும் நோய்கள்...?

காசநோய், அம்மை நோய், தடிமல்

✱ வைரஸ் கிருமியானது பக்றீரியாவை விட சிறியது. இதைக் கண்டுபிடித்தவர் யார்?

சேர்.டி.ஜே.ஐவனொஸ்கி



✱ கெனடாவின் தலைநகர் எது? அங்கு பாவனையிலுள்ள பணம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

தலைநகரம் ஒட்டாவா
பணம் - கெனடா டொலர்

✱ இலங்கை மன்னர் ஒருவர் தனது தந்தைக்கு பெண்கள் அணியும் ஆபரணங்களையும் துணிவகைகளையும் அனுப்பினார். அந்த மன்னன் யார்? அவர் ஏன் அப்படிச் செய்தார்?

துட்டகைமுனு மன்னன் எல்லாளனுடன் போர்செய்ய அவரது தந்தை அனுமதிக்காமையால் அவ்வாறு செய்தார்



✱ 'மோர்க்ளி' எனும் ஓநாய்களால் வளர்க்கப்பட்ட சிறுவன் எனும் கதாபாத்திரம் உலகப் புகழ்பெற்றது. இது எந்த நூலில் இடம்பெற்ற கதாபாத்திரம் ஆகும்? இதை உருவாக்கிய நூலாசிரியர் யார்?

ஜங்கல் புக் எனும் நாவலில் இடம்பெற்றது. நூலாசிரியர் - ருட்யாட் கிளிப்



✱ 'எதென்ஸ் பாடசாலை' என்ற ஓவியத்தை வரைந்த ஓவியக் கலைஞர் யார்?

ஐரோப்பா மறுமலர்ச்சிக்கால ஓவியர் ராஃபயேல் (1849-1520)



தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# அல்ஜீரியா

ஆபிரிக்காவில் ஆறு நாடுகளை எல்லையாகக் கொண்டிருப்பதோடு, பிரான்ஸின் வடக்கே மத்தியதரைக் கடலையும் எல்லையாக கொண்டுள்ளது. 1830 இல் பிரான்ஸ் இந்நாட்டை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தபின் சுமார் 100 வருடங்களுக்கு மேல் அவர்களின் ஆட்சியின் கீழ் அல்ஜீரியா இருந்தது. 1962 இல் அது சுதந்திரம் அடைந்தது. எண்ணெய் வளம் இருந்தபொழுதிலும் ஆபிரிக்காவில் அமைந்துள்ள மிகவும் ஏழ்மையான நாடுகளில் முதல் இடத்தை அல்ஜீரியா வகிக்கின்றது.



சுதேச பாரம்பரிய பர்பர் கோத்திரத்தார் இன்றும் அந்நாட்டில் வாழ்கின்றனர்.



அந்நாட்டை ஆக்கிரமித்த முதலாவது மக்கள் பிரிவினர் ஃபீனிசியன்கள்.



நாணயம் - அல்ஜீரிய டினார்.



கி.பி. 1510 இல் ஸ்பானியா அல்ஜீரியாவை ஆக்கிரமித்தது.



1830 இல் பிரான்ஸ் அல்ஜீரியாவை தனது குடியேற்ற நாடாக்கியது.





1962 ஜூலை 05 ஆம் திகதி பிரான்சிடமிருந்து சுதந்திரமடைந்தது. அதன் நினைவாக கட்டப்பட்ட சுதந்திர நினைவுத் தூபி.

பெரும்பகுதி பாலைவனங்களாகும்.



காய்கறிகள் மற்றும் பழப் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



பாரம்பரிய நடனம்.



ஏற்றுமதிக்காக தானியப் பயிர்ச் செய்கையும் இறைச்சி மற்றும் பாலுக்காக கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன.



### தேசிய மிருகம் மற்றும் மலர்

தேசிய மிருகம் - ஃபெனெக் ஃபொக்ஸ் நரி
தேசிய மலர்: ஜரின் டெக்டொரம்



### இனம்

| | |
|---|---|
| அராபிய பர்பர் | 99% |
| ஐரோப்பியர் | 01% |

### மொழி

அரபு, பிரெஞ்ச், பர்பர் உபமொழி (கபய்லிபர்பர், ச்செஒயுஆ பர்பர், மிசெப் பர்பர், டியுரெக் பர்பர்)

### சமயம்

முஸ்லிம்கள் 99%
ஏனையோர் 01%

### அரசியல்

நாடாளுமன்றக் கட்டடம்.



ஜனாதிபதி - அப்தெல்லாசிஸ் மொயுடெஃப்லிகா.

### தலைநகரம்






### அல்ஜீரியாவின் இயற்கை வளம்

பெற்றோலியம், இயற்கை வாயு, இரும்பு, பொஸ்பேட், யுரேனியம், ஈயம், துத்தநாகம்.



யுரேனியம் கிடைக்கக்கூடிய மாபெரும் சுரங்கங்கள் பல அங்குள்ளன.

மட்பாண்ட தொழிலுக்கு புகழ்பெற்றது.





மசகு எண்ணெய் வளம் அந்நாட்டில் உண்டு.



உயர்ரக தரைவிரிப்பு தயாரிப்பிற்கும் அல்ஜீரியா புகழ்பெற்றது.



அல்ஹைடா ஆயுததாரிகளால் இந்நாட்டிற்கு அச்சுறுத்தல் தோன்றியுள்ளது.



ஓர் இஸ்லாமிய பள்ளிவாசல்.



புராதன உரோம நாகரிகத்திற்கு சொந்தமான எச்சங்கள் பல அங்குள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனம் ஓட்டுதலை இலகுபடுத்தும் Automatic



வாகனத்தை இலகுவாக ஓட்டுவதற்கென்று கணினி மயப்படுத்திய நவீன app ஒன்று அறிமுகமாகியுள்ளது. இந்த app இற்கு Automatic என்று பெயரிடப்பட்டுள்ளது. நீங்கள் வாகனத்தில் எங்கு செல்கின்றீர்கள்?, செல்ல வேண்டிய இடத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்? ஆகியவற்றிற்கு இந்த app வழிகாட்டும். குறிப்பாக, இந்த Automatic app உங்களது வாகனம் செலுத்தும் முறையினை தனது கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கும். அத்துடன், நீங்கள் வாகனத்தின் வேகத்தைக் கூட்டியநேரம், ஸ்டியரிங்கை கையாளும் சந்தர்ப்பம் போன்ற விடயங்களை கண்காணிப்பதுடன், உங்களது வாகன ஓட்டும் 'டிரைவிங்' முறைக்கு புள்ளிகளை வழங்கும் பணியினையும் இந்த app செய்யும். அதற்கமைய, குறைந்த எரிபொருள் விரயத்தில் கூடிய தூரத்தை சென்றதன் அடிப்படையிலேயே உங்களுக்கு சிறந்த புள்ளிகளை இந்த app வழங்கும்.

> 'நீங்கள் வாகனத்தில் எங்கு செல்கின்றீர்கள்?, செல்ல வேண்டிய இடத்திற்கு எவ்வாறு செல்ல வேண்டும்? ஆகியவற்றிற்கு இந்த app வழிகாட்டும்'

மேலும், வாகனத்தில் ஏற்படும் கோளாறுகள் தொடர்பான தரவுகளையும் இந்த app வழங்கும். நீங்கள் குறித்த சந்தர்ப்பத்தில் இருக்கின்ற இடத்தை வரைபடம் வடிவில் காட்டுவதற்கும் இந்த app பயன்படுகின்றது. குறித்த Automatic app இனை பாவிப்பதற்கு வாகனத்தின் data port உடன் தொடர்புபடுத்த முடிகின்றதுடன், இதற்கென dongle ஒன்றையும் நீங்கள் வாங்க வேண்டியிருக்கும். இந்த டொங்கலின் விலை 100 அமெரிக்க டொலர் ஆகும். ஆனால், இதனை பயன்படுத்துவதன்மூலம் சேமிக்கப்படுகின்ற எரிபொருள் மிச்சத்துடன் ஒப்பிடுகையில் இது லாபகரமானதேயாகும்.

உங்கள் அபிமான

தமிழ் Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions

the SUNDAY TIMES

விஜய்

DailyMirror

தமிழ் Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார கார்ட்டூன் படம்






# கடல் பறவைகள் எதிர்கொள்ளும் ஆபத்து!




உலகிலுள்ள கடல் பறவைகளில் 90 சதவீத மானவற்றின் வயிற்றில் பிளாஸ்டிக் இருப்பதாக அண்மைய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. இதன்படி, 1960 ஆம் ஆண்டளவில் 5 சதவீத கடல் பறவைகளின் வயிற்றில் பிளாஸ்டிக் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளதோடு, 2010 ஆம் ஆண்டில் அது 80 சதவீதமாகவும், 2015 இல் அது 90 சதவீதமாகவும் அதிகரித்துள்ளமை தெரிய வந்துள்ளது. இந்நிலை தொடருமாயின், 2050 ஆம் ஆண்டாகும் போது 99 சதவீத கடல் பறவைகளின் வயிற்றில் பிளாஸ்டிக் இருக்கும் என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடலில் சேரும் பிளாஸ்டிக் கழிவுகளை, கடல் பறவைகள் உட்கொள்கின்றன. இந்நிலையானது, அவற்றின் அழிவுக்கு வழிவகுப்பதோடு, பிற்காலத்தில் ஏனைய கடல்வாழ் உயிரினங்களின் இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் கூறப்படுகின்றது. பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் கடலில் சேரும் அளவு அதிகரித்து வருவதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. மேலும் பிளாஸ்டிக்கினால் கடல் மாசுபடுவதன் தீவிரத்தையும் இது பிரதிபலிப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தங்கத்தைவிட விலை கூடிய ஓர் உலோகமே 'பிளாட்டினம்' (Platinum) ஆகும். எனினும், மக்கள் மத்தியில் பிளாட்டினத்தைவிட தங்கத்திற்கே அதிக மதிப்பு இருக்கின்றது. அத்துடன், பிளாட்டினத்தால் செய்யப்பட்ட ஆபரணங்களைவிட, தங்க ஆபரணங்களை அணியவே அதிகமானோர் விரும்புகின்றனர்.

ஆக, மக்கள் பிளாட்டினத்தை ஏன் நாடுவதில்லை என்பதற்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அதாவது,

# பிளாட்டினத்தை மக்கள் ஏன் நாடுவதில்லை?



வெள்ளி தங்கம் பிளாட்டினம்

பிளாட்டினம் சற்று கனமான உலோகம். எனவே, இதில் ஆபரணம் செய்யும்போது வேலைப்பாடுகளும் குறைவாகவே இருக்கும். அத்துடன், அதற்கான செய்கூலியும் அதிகமாகவே இருக்கும். பிளாட்டினமானது, பார்வைக்கு வெள்ளி போன்று இருப்பதால், இதில் ஆபரணம் செய்து அணிந்தாலும்கூட, அது வெள்ளியினாலான ஆபரணம் போன்றே தோற்றமளிக்கும். இத்தகைய காரணங்களினால்தான், தங்கத்தைவிட விலை அதிகமானதாக இருந்தாலும்கூட, பிளாட்டினத்தை மக்கள் நாடுவதில்லையாம்!

# பட்டங்களின் தலைநகரம்

ஆசிய நாடுகளில் வசந்தகாலம் ஆரம்பித்ததும், பட்டம் விடும் காலமும் ஆரம்பித்துவிடும். சீனா, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தோனேஷியா, மலேசியா, ஜப்பான் உட்பட, பல்வேறு நாடுகளில் இதுவொரு பிரபல்யமான காலப்பகுதியாக




கருதப்படுவதோடு, இக்காலத்தில் பட்டம் விடும் களியாட்ட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அண்மைக்காலமாக, இலங்கையிலும்கூட பட்டம் விடும் நிகழ்வுகள் பற்றி அறியக்கூடியதாக இருக்கின்றது.

தென் சீனாவின் ஷென்டொங் மாகாணத்திற்குரிய வெய்ஃபெங் எனும் நகரமே, உலகில் பட்டங்களின் தலைநகரம் என்று சிறப்பிக்கப்படுகின்றது. சர்வதேச காற்றாடி சம்மேளனத்தின் தலைமையகமும் இங்குதான் அமைந்துள்ளது என்பதோடு, வருடாந்த சர்வதேச காற்றாடி திருவிழாவும் இங்குதான் நடைபெறுகிறது. உலகிலுள்ள பட்டங்களின் மிகப் பெரிய அருங்காட்சியகமும் வெய்ஃபெங் நகரிலேயே அமைந்துள்ளது.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2015, செப்டெம்பர் 16 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday September 16, 2015.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org